பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 25 திங்கட்கிழமை (07-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:195

### நாளை நாடாளுமன்றம் கூடுகிறது

# அறுதிப் பெரும்பான்மை திரட்டும் அரசின் முயற்சி பலிக்கவில்லை!

## இ.தொ.காங்கிரஸும் காலை வாரிவிட்டது

கொழும்பு,ஜூன்7

**நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை எம்.பி.க்களின் ஆதரவைத் திரட்டுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு எடுத்த பகிரதப்பிரயத்தன முயற்சிகள் பலிக்கவில்லை.**

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அரசுக்கு ஆதரவு தரமறுத்து காலைவாரிவிட்டது.**

**இந்நிலையில், நாடாளுமன்றம் நாளை கூடுகின்றது.**

**எனினும், ஆட்சி உடனடியாகக் கவிழும் ஆபத்து நிலை இல்லையென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.**

அறுதிப்பெரும்பான்மை இல்லாத ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பியின் ஓர் எம்.பியுடன் சேர்ந்து ஆட்சி அமைத்துள்ளது.

அதன்பின்னர் எதிரணியில் இருந்து ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு எம்.பிகள் அரசுப்பக்கம் சாய்ந்தனர். ஆனால், அவர்களில் ஒருவர் எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார் என்ற அறிவித்தல் வெளியான பின்னணியில், அவரது பதவி சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கிறது. அவரது இடத்திற்கு புதியவர் ஒருவர் எம்.பியாகப் பதவியேற்பதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்துள்ளது.

இதேவேளை, ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் எம்.பியாக நியமனம் பெற்ற ஹுசைன் பைலா ஏற்கனவே அரசுப்பக்கத்துக்கு 'பல்டி' அடித்துவிட்டார். அவரோடு சேர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட ரிஷாத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

### குடாநாடெங்கும் பேரணிகள், கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்7

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் குடாநாட்டில் நேற்று பேரணிகள், பொதுக்கூட்டங்களுடன் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

விடுதலைப் போராட்டத்தில் முதலில் ஆகுதியான மாணவரான பொன். சிவகுமாரனின் நினைவு வளாகம் அமைந்துள்ள உரும்பிராயில் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

பேரணி, நினைவு வளாகத்தை வந்தடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிவகுமாரனின் தாயார் திருமதி பொன்னுத்துரை அன்னலட்சுமி பொதுச்சுடரை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நினைவுச் சுடரினை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் எஸ்.யோகராசா, வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ். கனகராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஏற்றிவைத்தார்.

லண்டனில் வசிக்கும் சிவகுமாரனின் சகோதரர் பொ.சிவசுப்பிரமணியம் மற்றும் கோப்பாய் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிரி ஆகியோர் சிவகுமாரனின் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

தமிழீழ மாணவர் எழுச்சிக் கீதத்தை வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் இசைத்தனர்.

தொடர்ந்து தமிழீழ மாணவர்

(14ஆம் பக்கம் பார்க்க)



உரும்பிராயில் அமைந்துள்ள தியாகி பொன். சிவகுமாரனின் உருவச் சிலைக்கு அவரது சகோதரர் பொன். சிவசுப்பிரமணியம் மலர்மாலை அணிவிப்பதையும் பொதுச் சுடரினை சிவகுமாரனின் தாயார் திருமதி பொன்னுத்துரை அன்னலட்சுமி ஏற்றிவைப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: வலிகாமம் செய்தியாளர் பொ.இராஜேஸ்வரன்)

## கூமாங்குளத்தில் சனி இரவு ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை!

வவுனியா கூமாங்குளம் அம்மன் கோவில் பகுதியில் ஓட்டோ சாரதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, வைரவர் புளியங்குளத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சதீஸ் (வயது 21) என்பவர் ஒரு முச்சக்கர வண்டி ஓட்டுநர்.

நேற்றுமுன்தினம் இரவு உணவைப் பெறுவதற்காக நகருக்கு வந்த இவரை, கூமாங்குளத்திற்கு சவாரி இருப்பதாக அழைத்துச் சென்ற இனந்தெரியாத நபர்கள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர் சுடப்பட்டு கிடந்த முச்சக்கர வண்டியிலிருந்து துப்பாக்கிச் சன்னம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை இராணுவ புலனாய்வுப்பிரிவும் பொலீஸாரும் மேற்கொண்டுவருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் வவுனியாவில் இடம்பெற்ற 14ஆவது கொலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகள் அமைப்பின் மாணவர் பிரிவினர் நேற்றைய மாணவர் எழுச்சித் தினத்துக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்த சமயம் இக்கொலை இடம்பெற்றுள்ளது. (க-164)

## தமிழ்ச்செல்வனின் ஐரோப்பிய விஜயம் பிற்போடப்பட்டது!

கிளிநொச்சி,ஜூன்7

விடுதலைப் புலிகள் தமது சட்டவல்லுநர்களுடன் கலந்துரையாடுவதற்காக ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளவிருந்த பயணத்தைப் பிற்போட்டுள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலைவரம், புரிந்துணர்வு உடன்பாடு மற்றும் இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை ஆகியன குறித்து தமது அமைப்பின் சட்டவல்லுநர்களுடன் கலந்துரையாடல் நடத்த விடுதலைப் புலிகள் முடிவு செய்திருந்தனர்.

இதற்கமைய விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இக்கலந்துரையாடலில் பங்குபற்ற இம்மாத நடுப்பகுதியில் ஐரோப்பிய நாடொன்றுக்குச் செல்லவிருந்தார்.

இந்தப் பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நோர்வேயின் அனுசரணைக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் அண்மையில் கிளிநொச்சி வந்த சமயம் விடுதலைப் புலிகள் கேட்டிருந்தனர்.

தற்சமயம் நிலவும் அரசியல் சூழ்நிலை காரணமாக இந்த விஜயத்தைப் பிற்போட்டுள்ளோம் என்று தமிழ்ச்செல்வன் உதயனுக்குத் தெரிவித்தார்.

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கம்போடியா விஜயம்

கொழும்பு,ஜூன்7

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி.ஹேரத் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கம்போடியாவுக்குச் சென்றுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையில் இராணுவ உளவறியும் தகவல்களைப் பரிமாறும் விவகாரம் தொடர்பாக அவர் கம்போடிய அரச பிரதிநிதிகளுடன் ஆராய்வார்.

இந்த விவகாரம் குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்றிலும் அவர் கைச்சாத்திடவிருக்கிறார். (எ-3-ரி)

## பிரதி அமைச்சர் அலுவலகம் முன் தாக்குதல்; 4 பேர் கைது!

கொழும்பு,ஜூன்7

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரப் பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சியின் கிரிபத்கொட அலுவலகத்துக்கு முன் நேற்றுமுன்தினம் நடந்த சூட்டுச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் அவரது பாதுகாப்புப்பிரிவைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-3)

## கனகன்புளியடியில் பொலீஸாரின் சோதனை நிலையம்

தென்மராட்சி,ஜூன்7

கனகன்புளியடிச் சந்தியில் பொலிஸ் சோதனை நிலையம் ஒன்று எதிர்வரும் பத்தாம் திகதி திறக்கப்படவுள்ளது.

சோதனை நிலையம் அப்பகுதியில் உள்ள தனியார் கட்டடமொன்றில் சாவகச்சேரி பொலீஸாரால் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோத மணல் மற்றும் மரங்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்












நேற்று யாழ். நகரில் நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ். மனோகராச் சந்தியிலிருந்து மேஜர் முரளி, தியாகி பொன். சிவகுமாரன் ஆகியோரின் திருவுருவப்படங்களைத் தாங்கியவாறு பேரணி யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தை நோக்கி நகர்வதையும் மைதானத்தில் தமிழீழத் தேசியக் கொடியை நல்லூர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.திருமறவன் ஏற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# தேசத்தின் புனர்நிர்மாணப் படையணியாய் மாணவர் சமூகம் உருவாகவேண்டும்

## எழுச்சிநாள் பிரகடனத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்7

விடுதலை வேண்டி நிற்கும் எமது தேசத்தின் புனர்நிர்மாணப் படையணியாய் மாணவர்கள் உருவாகவேண்டும்.

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி வெளியிடப்பட்ட பிரகடனத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுச்சிநாளை ஒட்டி நேற்றுக் குடாநாட்டில் இடம்பெற்ற பொதுக்கூட்டங்களில் இந்தப் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

'ஆற்றலைத் தேடி...' என்ற தலைப்பிலான இந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் தாயகம் எங்கும் பரந்து வாழும் மாணவர் மனங்களில் எழுச்சி பொங்கும் நாள். தேசியத்தின் விடுதலைக்கான எழுச்சி ஒவ்வொருவரின் மனங்களிலும் நிகழவேண்டிய வரலாற்றின் காலம் இது.

கற்றுணரும் மனநிலை வேண்டும் என்பதற்காகவே பள்ளிகளை நாடுகின்றோம். விடுதலை வேண்டி நிற்கும் எமது தேசத்தின் புனர்நிர்மாணப் படையணியாய் நாம் உருவாக வேண்டும்.

எமது வாழ்விற்கு உதவாத கல்விக்கொள்கையை எமக்குப் புகுத்த வேண்டும் என்பதற்காகப் பள்ளிகள் தோறும் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும், கட்டுப்பாடுகளுக்கும் உள்ளாகி ஒடுக்கப்பட்டும், கல்வியில் சாதிக்க எங்களால் முடியாது என்ற தாழ்வுச் சிக்கலுக்குள் அகப்பட்டும், ஏச்சும், நையாண்டியும் நிறைந்த அதிகார வன்முறைக்குள் அகப்பட்டும் சுயம் இழந்து, சுயம்பற்றிச் சிந்தித்து எதிர்காலத்தை நிர்ணயிக்கவே முடியாது. நடைப்பிண வாழ்வு வாழும் நிலை மாறவேண்டும். எமது மன அழுத்தங்களில் இருந்தும் துன்பச் சுமைகளில் இருந்தும் விடுபடக்கூடிய வழிகாட்டலே எமக்கு விருப்பமானதும் வேண்டுவதுமாகும்.

கல்விமுறைவழி என்பது மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் ஊடகம் என்ற நிலை மாறி எங்களை நாங்கள் தொலைக்கும் நாள்களாய் பள்ளி நாள்கள் கரைந்து போவதை நாங்கள் வெறுக்கின்றோம்.

ஸ்ரீலங்காவின் இனவாத அரசுகள் எம்மீது கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்குமுறைகள் ஏராளம். தமிழீழ மக்களின் பெரும் சொத்து கல்வி என்பது அகிலம் அறியும். அதனை சிதைக்க வென்றே பல வழிகளிலும் கட்டுப்பாடுகளை விதித்து வந்தது சிங்கள அரசு. அதனையும் வென்று தமிழீழ மாணவர்கள் உலகெங்கும் தமது திறமையைக் காட்ட வெளிப்பட்ட போது பேரினவாதிகளால் சகிக்க முடியாது போயிற்று. இனவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தமிழீழத்தின் முக்கிய பட்டினங்கள் தோறும் தூண்டிவிட்டு எமது முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றனர். ஸ்ரீலங்கா இராணுவம் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த தமிழீழ பட்டினங்கள் எங்கும் பண்பாட்டுச் சீரழிவினை திட்டமிட்டு மேற்கொண்டனர் பேரினவாதிகள். தமிழ்த் தேசத்துரோகக் குழுக்களும் இதற்குத் துணைபோயினர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னால் தமிழீழ விடுதலைப் புலிகள் எமது பகுதி எங்கும் கால்பதித்த பின்பு எங்களால் உண்மைகளை உணர முடிகின்றது. பேரினவாத நச்சுப்புகையினுள் புதையுண்டுபோன கணிசமான மாணவ சமூகத்தை நாங்கள் மீட்டு எடுக்கவேண்டும். தேசிய உயிருணர்வு அவர்களின் இதயச் சுவடுகளுக்கு செலுத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் எங்கள் தேச விழுமியம் பேணப்படும், பண்பாடும் காக்கப்படும். எமது தேசியத் தலைமையின் கீழ் விழிப்போடு நாங்கள் நிமிரவே விளைகின்றோம். நாங்கள் எங்கள் வாழ்வு பற்றிக் கற்பனை பண்ணவும் புதுவழி கண்டுபிடிக்கவுமான மன நிலை எமக்கு வேண்டும். அதற்கான சூழல்வேண்டும். சுதந்திரம் வேண்டும். கல்விக்கூடங்களில் மட்டுமல்ல தேசமெங்கும் இந்த சுதந்திரம் வேண்டும்.

தமிழீழ மாணவர் சமூகத்தின் எழுச்சி என்பது எங்களுக்குப் புதிதல்ல. மாவீரன் சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோர் தம்மைத்தாமே ஆகுதியாக்கி தமிழீழத் தேசிய மாணவ சமூகத்தினை விழிப்படைய வைத்தனர். எத்தனை ஆக்கிரமிப்புக்கும் மத்தியிலும் பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் தாண்டியும் எமது மாணவர்கள் தேசிய விடுதலைக்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளனர்.

எமது தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு மேகங்கள் எம்மைச் சூழ்ந்திருக்கும் வரையில் எமது முழு ஆற்றலையும் வெளிக்கொணர முடியாது என்பதையும் நாம் அறிவோம். எமது தேசிய விடுதலையின் வேருக்கு நீர் ஊற்றியபடியே தமிழீழ மாணவர்களாகிய நாங்கள் தலை நிமிர்வோம். மாவீரன் சிவகுமாரன், மேஜர் முரளி இருவரினதும் ஆன்மபலம் எங்கள் ஒவ்வொருவர் மீதும் தம் சக்தியை பாய்ச்சட்டும். தமிழீழ தேசிய ஆன்மாவாக உலகம் வியக்கும் வகையில் எமது விடுதலைப்போர் சதுரங்கத்தில் வெற்றியை நோக்கி காய்நகர்த்தும். எம் தேசியத் தலைமைக்கு சகல வழிகளிலும் முண்டுகொடுப்போம். எம் எதிர்கால மாணவ சந்ததியினரின் சுதந்திரமான அறிவுத்தேடலுக்கு வழிசமைப்போம். என்றுள்ளது.(எ-3-6-86)

# விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை உலகறியச் செய்வது எழுத்தாளரின் கடமை

## மலையகம் மற்றும் கிழக்கு படைப்பாளிகள் மத்தியில் புதுவை



யாழ்ப்பாணம்,ஜூன்7

விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை உலகிற்கு எடுத்துச் சொல்லும் கடமை இலக்கிய படைப்பாளர்களுக்கு உரியது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

நேற்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மலையகம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பங்குகொண்ட கலந்துரையாடலிலேயே அவர் இக் கோரிக்கையினை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது விடுதலைப் போராட்டம் நல்லதோர் இடத்தில் வந்து நிற்கிறது.

இந்த விடுதலைப் போராட்டம் தொடர்பாக அதன் நியாயப்பாடுகளை உலகின் கண்களுக்குக் கொண்டு செல்வது இலக்கியப்படைப்பாளர்களின் முக்கிய பணியாகும்.

எழுத்தாளர்கள் என்றும் இன, மத, பேதம் பேணக்கூடாது.

நாம் சிங்கள எழுத்தாளர்களின் நூல்களை வவுனியாவில் வெளியிட உள்ளோம். ஆகவே, எழுத்தாளர்கள் தர்மத்தின் வழியில் நின்று உண்மையான படைப்புக்களைப் படைக்க வேண்டும்.

கடந்த காலத்தில் வன்னியில் போராளிகளும் மக்களும் இராணுவ முற்றுகைக்குள் எதிர்கொண்ட துன்பங்கள் முழுமையான இலக்கியப் படைப்புக்களாக வெளிவரவில்லை.

இதற்கு முக்கியகாரணம் உண்மைகள் வெளியில் வரவில்லை. போராளிகள் தமது இலக்கியப் படைப்புக்களில் போராட்ட வரலாறுகளையும் மக்களின் துன்பங்களையும் வெளிக்கொணர்ந்த போதும் அது முழுமை பெறவில்லை.

இன்று எல்லோரும் தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள் என்று பிரித்துச் சொல்லும் இயல்பு உள்ளது.

நான் அவ்வாறு பார்க்கவில்லை. தமிழ் எழுத்தாளர்கள் என்று மட்டுமே பார்க்கிறேன்.

சில காலத்தில் நிகழ்ந்த தவறுகளை வைத்துக்கொண்டு எதையும் பிரித்துப்பார்க்க முடியாது.

சமாதான காலத்தில் எல்லோரும் ஓர் இடத்தில் சந்திக்கின்றோம். இது மகிழ்ச்சிக்குரியது. இனி நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று தெரிவித்தார் புதுவை இரத்தினதுரை. (4-12)








வடமராட்சிக் கோட்டத்தில் நேற்று நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகளில் தலைவர் பிரபாகரனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி முன்செல்வதை முதலாவது படத்திலும் - தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தேசியக் கொடி ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் - சுலோக அட்டைகளைத் தாங்கியபடி மாணவர்கள் [illegible] செல்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படம்: கரவெட்டிச் செய்தியாளர் எஸ்.சுந்தரலிங்கம்)*

### சமகால அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்7

சுவதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்தும் சமகால அரசியல் கருத்தரங்கின் 9 ஆவது தொடர் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'திட்டமிட்ட தமிழர் கலாசார பிறழ்வுகள்' என்ற தலைப்பில் யாழ். வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரியின் விரிவுரையாளர் அ.குமாரவேல் கருத்துரை வழங்குவார்.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைமுயற்சி வழக்கில் நடிகர் பாலகிருஷ்ணா கைது!

இந்தியாவில் தெலுங்கு திரைப் படத் தயாரிப்பாளர் மற்றும் உதவியாளர் ஆகியோரை துப்பாக்கியால் சுட்ட வழக்கில் நடிகர் பாலகிருஷணா நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருந்த அவரை நேற்று அதிகாலை 3.20 மணிக்கு பொலீஸார் கைதுசெய்தனர். இதையடுத்து அவர் ஹைதராபாத் நீதிவானின இல்லத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது, நடிகர் பாலகிருஷ்ணா நீதிவானிடம் கொடுத்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் அவரை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து அவர் சிகிச்சையை தொடர மீண்டும் மருத்துவமனைக்கு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 3 ஆம் திகதி இரவு தனது இல்லத்தில் திரைப்பட தயாரிப்பாளர் சுரேஸ், ஜோதிடர் சத்திய நாராயண சவுத்திரி ஆகிய இருவரையும் பாலகிருஷ்ணா கைத்துப்பாக்கியால் சுட்டார். இதில், படுகாயமடைந்த இருவரும் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முன்னாள் முதல்வர் என்.டி.ராமராவின் இளைய மகனான நடிகர் பாலகிருஷ்ணா கைது செய்யப்பட்டிருப்பது ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஒ)

# அல்-கெய்டாவின் வழிகாட்டல் குறிப்புகள்

இஸ்லாமாபாத்,ஜூன்7

பாகிஸ்தானில் சமீபத்தில் அல்-கெய்டா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய அலாஸ்மி என்ற தீவிரவாதி கைதுசெய்யப்பட்டார். "ஹர்கத்-அல்- முஜாகிதீன்'' தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த இவர், பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆயுதங்களை விநியோகித்து வந்துள்ளார்.

அவரிடம் இருந்து தீவிரவாதிகளுக்கான வழிகாட்டல் புத்தகம் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டது.

தீவிரவாதிகள் எப்படிச் செயற்படவேண்டும், எப்படிச் செயற்படக்கூடாது, எதையெல்லாம் தவிர்க்கவேண்டும் என்பதற்கான கட்டளைகள் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. புலனாய்வுத் துறையினருக்குத் தரக்கூடிய அதேபோன்ற ஆலோசனைகள், தீவிரவாதிகளுக்காக உருவாக்கப்பட்ட இப் புத்தகத்திலும் உள்ளது.

புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கட்டளைகளின் விவரம் வருமாறு.

★கைதுசெய்யப்பட்டால் எந்த ரகசியங்களையும் வெளியிடக்கூடாது.

★குடும்பத்தினரை சந்திப்பதை தவிர்க்கவேண்டும்.

★பயணங்களின்போது, இயக்கம் தொடர்பான முக்கிய குறிப்புக்கள், மற்ற தீவிரவாதிகளின் முகவரிகளை எடுத்துச்செல்லக்கூடாது.

★எப்போதும் ரகசிய பாஷைகளைப் பயன்படுத்தவேண்டும்.

★குடும்பத்தினரிடம் இயக்கத்தின் ரகசியங்கள், செயற்பாடுகள் பற்றிப் பேசக்கூடாது.

★நண்பர்கள், நண்பிகளிடம் சொந்த விடயங்கள் பற்றிப் பேசக்கூடாது.

★அல்லாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட உங்களுக்கு, குடும்ப பந்தங்களோ, நண்பர்களோ முக்கியமல்ல.

★சாலை விதிகள் மற்றும் சட்டத்தை மதித்து நடக்கவேண்டும். குறிப்பாக வாகனங்களுக்கு தேவையான எல்லா ஆவணங்களையும் முழுமையாக வைத்திருத்தல் வேண்டும்.

★போக்குவரத்து பொலீஸாரிடமோ, செக்போஸ்ட் பொலீஸாரிடமோ சண்டையிடவோ, வாக்குவாதமோ செய்யக்கூடாது.

★அதிகாரிகள் தங்கள் குடும்பத்தினரை அவமதிக்கும் போது மன உறுதியை இழக்கக்கூடாது.

தீவிரவாதிகள், குறிப்பாக அரேபியா மற்றும் ஆப்கன் தீவிரவாதிகள், பஞ்சாபியர்களை நம்பக்கூடாது, தாககுதல்கள் பற்றியோ அல்லது இடம் மாறுவது பற்றியோ அவர்களிடம் எதையும் சொல்லக்கூடாது. ஏனெனில், புலனாய்வு அதிகாரிகளில் பெரும்பாலானோர் பஞ்சாப்பியர்களாக இருப்பதால், அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

-இவ்வாறு அப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெ.முன்னாள் அதிபர் ரீகன் காலமானார்!

வாஷிங்ரன்,ஜூன்7

அமெரிக்காவில் 1981 முதல் 1989 வரை ஜனாதிபதியாக இருந்தவர் ரொனால்ட் ரீகன். குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இவர் முன்னாள் நடிகர். ஹொலிவூட் பட உலகை கலக்கிய ரீகன் ஏராளமான படங்களில் நடித்திருக்கிறார். பட உலகில் இருந்து அரசியலுக்கு நுழைந்த இவர் கலிபோர்னியா மாகாண ஆளுநர் ஆகி, பிறகு அதிபர் பதவியையும் பிடித்தார்.

அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ரீகன், லொஸ்ஏஞ்சல்சில் உள்ள தனது வீட்டில் குடும்பத்துடன் வசித்து வந்தார்.

அவர் உடல் நலக் குறைவால் அவதிப்பட்டு வந்தார். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அவர் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார். அவர் அதிபர் பதவியில் இருந்தபோதே 2 தடவை



குடலில் சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது. இந்த நிலையில் அவர் 'அல்சிமர்ஸ்' என்ற நோயால் அவதிப்பட்டார்.

நரம்பு மண்டலமும், மூளைக் கலங்களும் இதனால் பாதிக்கப்பட்டன. அவர் நினைவிழந்த நிலையிலேயே படுக்கையில் கிடந்தார். உறவினர்களைக்கூட அவரால் அடையாளம் காணமுடியவில்லை.

அவரது மனைவி நான்சி மற்றும் குடும்பத்தினர் அவரை தனியறையில் வைத்து பராமரித்து வந்தனர்.

இந்த நிலையில் ரீகன் நேற்று அதிகாலை மரணமடைந்தார். அவருக்கு வயது 93. இவர் அமெரிக்காவின் 40 ஆவது அதிபர் ஆவார்.

ரீகன் 1981 ஆம் ஆண்டு முதல் தடவையாக அமெரிக்க அதிபர் ஆனார். 4 ஆண்டுகள் கழிந்து நடந்த அதிபர் தேர்தலிலும் இவரே வெற்றி பெற்று மீண்டும் அதிபராகி 1989 வரை அதிபர் பதவி வகித்தார்.

1981 ஆம் ஆண்டு இவரைச் சுட்டுக்கொல்ல முயற்சி நடந்தது. இந்தக் கொலை முயற்சியிலிருந்து அப்போது ரீகன் தப்பினார்.



காஸாவிலிருந்து இஸ்ரேலியப் படையினரை திருப்பிப்பெறும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஜெருசலேமில் ஆர்ப்பாட்டம் நடத்திய இஸ்ரேலியர்கள்.

# டைட்டானிக் கப்பலில் மீண்டும் ஆய்வு

அட்லாண்டிக் கடலில் டைட்டானிக் கப்பல் 1912 ஆம் ஆண்டு மூழ்கியது. இதில் 1500 இற்கு மேற்பட்டோர் இறந்துவிட்டனர். இந்த நிலையில் கப்பலில் உள்ள பெரும்பாலான பொருள்கள் மீட்கப்பட்டு அருங்காட்சியகங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டன.

ஆனால், இன்னும் சில பொருள்கள் கப்பலில் அப்படியே உள்ளன. இந்த நிலையில் டைட்டானிக் கப்பலில் உள்ள சில அரிய பொருள்களை திருடர்கள் திருடிச்சென்றுவிட்டனர். அவை சீக்கிரம் அரித்துப்போய் விடுவதாகவும் தகவல்கள் வந்தன. இதைத் தொடர்ந்து அந்தக் கப்பலைக் கண்டுபிடித்து உலகிற்குத் தெரிவித்த விஞ்ஞானி ரொபர்ட் பல்லார்டு என்பவர் மீண்டும் கடலில் கப்பல் மூழ்கிய இடத்திற்கு வந்துள்ளார்

அவர் கடலில் பொருள்கள் திருட்டுப்போவதை தடுக்கவும், அவை ஏன் சீக்கிரம் அரித்து கெட்டுப்போய் விடுகின்றன என்ற ஆய்விலும் ஈடுபட உள்ளாராம்.

## உலக அரங்கில்

# தீவிரவாதத்திற்கு எதிரான போரில் மக்களை பொறுமைகாக்குமாறு அதிபர் புஷ் கோரிக்கை

வாஷிங்ரன்,ஜூன்7

தீவிரவாதத்திற்கு எதிரான போர் விடயத்தில் மக்கள் பொறுமைகாக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதிபர் புஷ் தனது வாராந்த வானொலி உரையில் இந்தக் கோரிகையை விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீவிரவாதத்திற்கு எதிரான போரில நாம் மூன்று ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளோம். இந்தப்போரில் தோற்றுவிடுவோம் என எந்தவகையிலும் நம்ப வேண்டாம். நம் நாட்டின் பாதுகாப்புக் கருதி நாம் இந்தப்போரை நடத்திக்கொண்டிருக்கின்றோம். மனித சமுதாய பாதுகாப்புக் கருதி நாம் இந்தப்போரை நடத்திக்கொண்டிருக்கின்றோம். மனித சமுதாய நன்மைக்காக இதைச் செய்கின்றோம். இந்த விஷயத்தில் நமது கடமையைச் செய்வதன்மூலம நமது உயர்ந்த மதிப்புகளில் நாம் உறுதியாக இருப்பதோடு, இந்த தலைமுறையில் வாழும் நாம் சுதந்திரத்தின் சக்தி என்ன என்பதை உலகிற்கு தெரிவிக்கமுடியும்.

தீவிரவாதத்திற்கு எதிரான இயக்கம் பக்தாத்தையும் தாண்டிச்சென்றுள்ளது. அதனால் மக்கள் பொறுமை காக்கவேண்டும். 2001 ஆம் ஆண்டு நடந்த தீவிரவாதிகள் தாக்குதல் களுக்குப் பின்னர் தீவிரவாதத்திற்கு எதிரான போர் பல வகையில் நடைபெற்றுவருகின்றது. மொராக்கோ முதல் இந்தோனேசியாவரை தீவிரவாதிகள் வன்முறை வெறியாட்டம் நடத்தியுள்ளதை நாம் பார்த்திருக்கின்றோம். தீவிரவாத்தின் மையமாக மத்திய கிழக்கு நாடுகள் உள்ளன.

மத்திய கிழக்கு பிராந்தியம் சர்வாதிகாரிகளின் கைகளில் சென்றுவிட்டால் அந்தப் பகுதி வன்முறைக் களமாகிவிடும். அழிவு சக்திகள் அதிகரிப்பதோடு தற்கொலைப் படையினரை பல நாடுகளுக்கு அனுப்பி தாக்குதல் நடத்துவதும் தொடரும். அதற்குமாறாக அந்தப் பிராந்தியத்தில் ஜனநாயகம் வளர்ந்தால் தீவிரவாத இயக்கங்கள் ஆதரவை இழக்கும். அந்த அமைப்பினர் புதிதாக ஆள்களை தேர்வுசெய்வது தடைப்படும். அதனால் தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெறுவதே நமது பணி.

ஜனநாயகப் பாதையில் தற்போது ஈராக் சென்றுகொண்டிருக்கிறது. அங்கு முழுமையான, சுதந்திரமான அரசு அமையும் நிலை உருவாகிறது. ஈராககின் இடைக்கால அரசுக்கு தலைவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இது அங்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதற்கான அறிகுறியே. தங்களின் உரிமைகளை மற்றும் நலன்களைப் பாதுகாக்க முழுமையான சுதந்திரம் பெற்ற நாடு உருவாகவேண்டுமென ஈராக் மக்கள் விரும்புகின்றனர். அந்த விருப்பம் நிறைவேறும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

- இவ்வாறு அதிபர் புஷ் கூறினார்.

# பணம் கொடுத்து மணமகள் வாங்கும் ஆக்ரா இளைஞர்கள்

ஆக்ரா,ஜூன்7

பணமில்லை என்ற காரணத்தால், முப்பது வயதைக் கடந்த பின்பும் திருமண ஏக்கத்தில் சிக்கியுள்ளனர் ஆக்ரா வாலிபர்கள். இதனால் வேறுவழியின்றி, கிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த மணமகளை விலைக்கு வாங்கும் பரிதாப நிலை தொடர்கிறது. இந்த சோகமான முடிவு டில்லி ஜெய்ப்பூர் நகர்களிலும் தற்போது வேகமாகப் பரவி வருகிறது.

ஆக்ராவிலுள்ள தலித் மற்றும் சிறுபான்மையினர் வாழும் இடங்களில் புதிது புதிதாக குடிபுகும் மணமக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த ஜோடிகளில் மணமகன் உள்ளூரைச் சேர்ந்தவராகவும், மணமகள் கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்தவராகவும் இருக்கின்றனர். அதிலும் குறிப்பாக வங்களாதேசம், பீகார் பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகம்.

கச்பூரா கிராமத்தைச் சேர்ந்த சுரேந்திரசிங் என்பவர் கூறுகையில், "கடந்த சில ஆண்டுகளாகவே விலைக்கு வாங்கப்படும் மணமகளின் இறக்குமதி ஆக்ராவில் தொடர்கிறது. குறிப்பாக குறிப்பிட்ட குலத்தைச் சேர்ந்த வாலிபர்கள் நீண்ட காலமாக திருமணம் செய்யமுடியாமல் தவிக்கின்றனர். இதற்குப் பல காரணம் இருந்தாலும், பணப் பிரச்சினை முக்கியமாக இருக்கிறது. முப்பதுகளை கடந்துவிட்ட இவர்கள் வேறுவழியின்றி கிழக்கு நோக்கிச் செல்கின்றனர். அங்கு கிராமங்களில் 10 ஆயிரத்துக்கும் 20 ஆயிரத்துக்கும் பெண்களை விலைக்கு வாங்கி, மனைவியாக்கிக் கொள்கின்றனர். இதில் தரகுக் கொடுப்பனவும் அடங்கிவிடுகிறது. ஒருவாரத்துக்குள் மனைவியை விலைக்கு வாங்கிக் கொண்டு சொந்த ஊருக்கு திரும்பி வந்துவிடுகின்றனர். இதை வாலிபர்களின் பெற்றோர்களும் ஆரத்தி எடுத்து வரவேற்கின்றனர்" - என்றார்.

கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் கடும் உழைப்பாளிகள். அதனாலேயே அவர்களை விரும்பி மணக்கின்றனர் என்றும் காரணம் கூறப்படுகின்றது. ஊனமுற்ற இளைஞர்களும், மனைவியை விலைக்கு வாங்கிக் கொள்கின்றனராம். ஆக்ரா மட்டுமல்ல, ஜெய்ப்பூர், டில்லியிலும் வாலிபர்கள் இப்போது கிழக்கு மாநிலங்களை நோக்கிச்செல்ல ஆரம்பித்து விட்டனர். இதற்கு உள்ளூரில் ஆண்-பெண் விகிதத்தில் உள்ள ஏற்றத்தாழ்வும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகின்றது.

# நோர்மண்டித் தரையிறக்கத்தின் 60ஆவது ஆண்டு தினம் நேற்று

இரண்டாம் உலகப்போரின் போது ஹிட்லரின் படைகளை தோற்கடிக்க அடித்தளமிட்ட நோர்மண்டி தரையிறக்கத்தின் 60ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று பிரான்ஸில் கோலாகலமாக இடம்பெற்றது.

உலகெங்கிருந்தும் 20 நாடுகளின் தலைவர்களும் இரண்டாம் உலகப் போரில் பங்கெடுத்துக்கொண்ட முன்னாள் படையினர் ஆயிரக்கணக்கானோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். முன்னாள் நேச நாடுகளின் தலைவர்களே நிகழ்வில் அதிகளவில் கலந்துகொண்டனர். அவர்களுடன் ஜேர்மன் அதிபர் ஸ்குரூடரும் நிகழ்வில் பங்கேற்றார் என்பது விசேட அம்சமாகும். இந்த நினைவு நாள் கொண்டாட்டங்களில் கலந்துகொண்ட முதலாவது ஜேர்மனியத் தலைவர் இவராவார். பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியிலும் அவர் இந்தக் கொண்டாட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டார்.

ஸ்குரூடா இந்த விழாவில் கலந்து கொண்டமை ஜேர்மனியில் இருந்து போர் வெளியேறிவிட்டது என்பதை குறிப்பதாக இருக்கின்றது என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## ரஷ்யப் பெண் ஸ்பெயினில் கைது!

ஸ்பெயின் நாட்டில் சட்ட விரோதமாக பேனா துப்பாக்கிகள் வைத்திருந்த ரஷ்ய நாட்டு பெண் ஒருவர் பொலீஸாரிடம் சிக்கினார்.

ரஷ்யாவில் இருந்து பலர் ஸ்பெயின் நாடு வழியாக சட்டவிரோதமாக துப்பாக்கிகளைக் கடத்துவது அதிகரித்து வருகிறது. இதனைத தடுக்க ஸ்பெயின் பொலீஸார் திவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கப்பல்தாங்கிகளில் இருந்து கழுவி அகற்றப்படும் எண்ணெய், தெருக்களில் சிந்தும் எண்ணெய், தொழிற்சாலைக் கழிவுகளாக வரும் எண்ணெய் என 21 மில்லியன் பீப்பாய்கள் அளவிலான எண்ணெய் ஆண்டுதோறும் கடலில் கலக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்துனுவெவ படுகொலைகள்:

# குற்றவாளிகளின் மேன்முறையீட்டை விசாரிக்க நீதியரசர் குழு நியமனம்

பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்வதற்காக நீதியரசர்கள் 5 பேரைக் கொண்ட உயர்நீதிமன்றக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவிற்கு உயர்நீதிமன்ற நீதியரசர் ஜே.ஏ.என்.சில்வா தலைமை வகிப்பார். மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி பண்டாரவளையில் அமைந்துள்ள பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமுக்குள் புகுந்து அங்கு தங்கவைக்கப்பட்டிருந்தவர்களில் 27 தமிழர்களைப் படுகொலை செய்த சம்பவம் தொடர்பாக 41 பேருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது.

3 நீதியரசர்கள் முன்னிலையில் மேல்நீதிமன்றில் வழக்கு விசாரிக்கப்பட்டது. இந்த விசாரணை முடிவில் 5 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையை நீக்கித் தம்மை நிரபராதி என அறிவிக்குமாறு அவர்கள் மேன்முறையீடு செய்திருக்கிறார்கள். இவர்களில் 3 பேர் பிந்துனுவெவ கிராமவாசிகள் இருவர் பொலீஸ் அதிகாரிகள் ஆவர். (ஒ-ரி)

# ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி மாணவர் விவகாரம்: பொலீஸாருக்கு எதிராக நீதி விசாரணை வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்து

கொழும்பு,ஜுன்7

பத்தனை ஸ்ரீபாத கல்வியிற் கல்லூரி மாணவர்மீது ஹற்றன் பொலீஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்து நியாயபூர்வமான விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட பொலீஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உதவவேண்டும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவி ராதிகா குமாரசாமியிடம் புதிய ஜனநாயகக் கட்சி கோரியுள்ளது.

இது தொடர்பாக புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான இ.தம்பையா மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிலுநர் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடியில் சமபந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பான கோரிக்கை வலுத்ததை அடுத்து, அக்கல்லூரி மார்ச் மாதம் முதல் காலவரையறையின்றி மூடப்பட்டது. ஆசிரிய பயிலுநர் மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் ஆசிரிய பயிலுநர் மாணவர்களின் கோரிக்கை இனவாத அடிப்படையில் வெளியுகுலக்குக் காட்டப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் ஆசிரிய பயிலுநர் மாணவர்களுக்கும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்குமிடையில் பிரச்சினை ஏற்படுவதும் கல்லூரி மூடப்படுவதும் வழமையாகிவிட்டது. மூடப்பட்ட கல்லூரியைத் திறக்கக் கோரி கடந்த மே 28ஆம் திகதி கவனயீர்ப்பு ஊர்வலமொன்றை மேற்கொள்ள மாணவர்கள் முயற்சித்தனர்.

இந்த ஊர்வலத்தின்மீது பொலீஸார் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். பலர் குண்டாந்தடிப் பிரயோகத்திற்கு உள்ளாகினர். கண்ணீர்ப் புகைத்தாக்குதலால் சிதறி ஓடிய மாணவர்கள்மீது மிருகத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால், பலர் காயமுற்றனர். காயமடைந்தவர்களில் பத்துப்பேர் நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அமைதியான ஊர்வலத்தின்மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம்செய்து, சிதறியோடியவர்களின்மீது தாக்குதல் மேற்கொண்டதன் மூலம் ஹற்றன் பொலீஸார் கருத்துக்களை வெளிப்படுத்தும் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர்.

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் மறியல் போராட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெறும்போது அதைக் கண்டும் காணாமாலும் செயற்படும் பொலீஸார் மலையகத்தில் மட்டும் இனரீதியாகப் பாரதூரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோதும்கூட கருத்துக்களை வெளிப்படுத்த ஊர்வலங்களும் மறியல் போராட்டங்களும் நடைபெற்றுள்ளன. அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாதபோது ஹற்றனில் பொலீஸார் மேற்கொண்ட இந்த நடவடிக்கை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது - என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் வைகாசி மாதம் 27ஆம் நாள் (09-06-2004) புதன்கிழமை பகல் 10.37 மணிமுதல் 11.48 மணிவரையுள்ள சதய நட்சத்திரமும் சிங்கலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரன்
திருவளர் செல்வன்
**லோகேஸ்வரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருவளர் செல்வி
**உதயச்செல்வி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர், **சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில்** திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி சுப்பிரமணியம்
பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.
T.P:0776184633.

நிரந்தர முகவரி:
சிறுவிளான்,
இளவாலை.

(32776) (26-14-16)



# மனதார வாழ்த்துகின்றோம்



யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் கடந்த 24.05.2004 அன்று அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதார முகாமைத்துவ உதவியாளர்

**திரு.ப.ஆனந்தகுமார்**

அவர்களை நாம் மனதார வாழ்த்தி அவர் பணி மேலும் தொடர வேண்டுகின்றோம். (14-16-26)

வல்வை வீதி,
உடுப்பிட்டி. (C/35455)

**ARUL JEWELLERY**
அருள் நகைமாடம்.



# பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004-06-09 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

**பணிநிலை:**

(01) காப்பாளர் (02) எழுதுநர்
(03) வரி அறவீட்டாளர்

**தகைமைகள்:**

01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02) அகவை 18-35 வரை இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும்:

*நாள்:* 2004-06-09
*நேரம்:* காலை 10.00 மணி
*இடம்:* 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

★ *குறிப்பு:* நேர்முகத் தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதரல் வேண்டும்.

**ஆளுநகை,**
**சந்தைப்பகுதி,**
**யாழ்.மாந...**

(32792) (26-14-16)



தேவனால் கூடாத காரியம் ஒன்று உண்டோ?

# விடுதலையின் ஆராதனை

சிறப்பு அற்புத விடுதலைக் கூட்டங்கள்

இலங்கையிலும் உலகத்தின் பல பாகங்களிலும் தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்படும் தேவ ஊழியர்
சுவிசேஷகர் W.A.ஸ்ரான்லி
**Power deliverance ministry with Evangelist W.A.Stanley**

முதலாவது கூட்டம்
*காலம்:* June திங்கட்கிழமை - மாலை 4.30 மணி
*இடம்:* மாகியப்பிட்டி - 07.06.2004

இரண்டாவது கூட்டம்
*காலம்:* June புதன்கிழமை - மாலை 4.30 மணி
*இடம்:* ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானம், மல்லாகம் - 09.06.2004

மூன்றாவது கூட்டம்
*காலம்:* June வெள்ளிக்கிழமை - மாலை 4.30 மணி
*இடம்:* ஏழாலை தெற்கு, குளத்தடி - 11.06.2004

இவரது கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தெய்வீக சுகத்தையும், ஆறுதலையும் பெறுகின்றார்கள். இந்தக் கூட்டங்களில் வியாதியஸ்தர்களுக்காக விசேஷமாக ஜெபிக்கப்படும். தெய்வீக சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

உங்கள் பிரார்த்தனைக்குப் பதில் உண்டு.

## ஜீவ ஒளி மிஷன்

*வல்லமையான தேச செய்திகள், சிறப்புப் பாடல்கள், தேவ பிரசன்னத்தில் விடுதலை, சுகம், அற்புதம், சமாதானம்*

மனதுருக்கத்தின் தேவன் உன்னையும் அழைக்கிறார்.

எமது வழமையான ஆராதனைகள்:
சனி காலை 9.00 மணி ஞாயிறு காலை 9.30 மணி

தொடர்புகளுக்கு:
**Living Light Mission**
கந்தரோடை வீதி, சுன்னாகம்.
0777-164775.

(32798)(34-26-14-16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## விரக்தியின் விளிம்பில் தடுமாறும் அரசு!

சமாதான நடவடிக்கைகளை முன்நகர்த்தும் முயற்சிகளில் தனது இயலாத்தனம் காரணமாகக் களைத்து பின்வாங்கிவிட்ட சந்திரிகா அரசு, இப்போது மாற்றுத் திட்டங்கள் குறித்து ஆராய்வதாகத் தெரிகின்றது.

பேரினவாதிகளின் பிடியில் சிக்கியுள்ள அரசு, விட்டுக் கொடுக்க முடியாத கடும்போக்கிலிருந்து வெளியே வர இயலாத நிலையில் - சர்வதேசம் உறுதியளித்த 45 ஆயிரம் கோடி ரூபா நிதி உதவியையும் அதனால், பெற முடியாமல் இழந்து - இக்கட்டில் நிற்கின்றது.

இதனால், விரக்தியின் விளிம்புக்குச் சென்றிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக ஒரே சமயத்தில் இரண்டு தோணிகளில கால்வைக்க முயல்கின்றது என்பது தெளிவாக வெளிப்படுகின்றது.

ஒருபுறம் அமைதி முயற்சிகளில் ஈடுபடுவதாக வெளியே வேடம் போட்டுக் காட்டுவது, மறுபுறம் யுத்த முனைப்பில்- இராணுவத் தீவிரத்தில் - அதிக ஈடுபாடு கொள்வது - இவ்வாறு ஓர் இரட்டை முயற்சி.

யுத்தமுனைப்பில் ஈடுபாடு காட்டுவதிலும் இரண்டு எதிரெதிர்ப் பக்கங்களில் உதவிகளைப் பெறவும் சந்திரிகா அரசு பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. ஒருபுறம் அமெரிக்கா மறுபுறம் இந்தியா.

இப்படி அரசியல் விவகாரங்கள் உட்பட சகலவற்றிலும இரண்டுதோணிகளில் கால்வைப்பதன் மூலம் விடயங்களைப் போட்டடிக்க கங்கணம் கட்டி நிற்கிறது அரசு.

பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியைத் திருப்திப்படுத்துவதற்காக சமாதான முயற்சிகளில் தான் வெளிப்படுத்திவரும் இறுக்கமான நிலைப்பாடு காரணமாக அதில் முன்நகர்வுக்கு சாத்தியமில்லை என்பதை ஓரளவு உணர்ந்து கொண்டுள்ள அரசு யுத்தம் தவிர்க்கமுடியாதது எனப் புரிந்துகொண்டு மெல்ல மெல்ல அந்தத் திசையை நோகத் திரும்பத் தொடங்கியிருக்கின்றது. அதற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகிவிட்டன.

இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு, ரஷ்யாவில் ஆயுதத் தளபாடத் தேடல், இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்த முஸ்தீபு, அமெரிக்காவுடன் கூட்டு இராணுவ ஒத்திகை, இராணுவக் கட்டமைப்பில் திடீர் மாற்றங்கள் - இவையெல்லாம் மீண்டும் யுத்தத்துக்கான தயாரிப்பு வேலைகள் தீவிரமடைந்து வருவதை வெளிப்படுத்தும் சமிக்கைகளே.

இதற்கிடையில் இலங்கை விவகாரத்துக்குள் இந்தியத் தூதரகத்தின் - குறிப்பாக கொழும்புக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னின் - தலையீடு அதிகரித்து வருவதை வாரயிறுதி ஆங்கிலப் பத்திரிகைகள் அம்பலப்படுத்தி, அவரை 'வாங்குவாங்கென்று வாங்கியிருக்கின்றன'.

அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமான ஈடுபாட்டையும முன்நகர்வையும் ஏற்படுத்தத் தவறியதற்காக சர்வதேச சமூகத்தால் கடிந்துகொள்ளப்பட்டு சர்வதேச உதவிகள் மறுக்கப்பட்டு, தடுமாறும் இலங்கைக்கு ஆபத்பாந்தவராகக் கைகொடுக்கப் போகின்றவர் போல முன்வருகிறார் நிருபம் சென். மறுக்கப்பட்ட சர்வதேச உதவிகளை வேறு வழிகளில் பெற்றுக்கொடுத்துத் தாம் ஈடுசெய்யப் போகிறார் என உறுதி வழங்குகின்றார். நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாமல் அந்தரிக்கும் இந்தச் சிறுபான்மை அரசுக்கு, எதிரணித் தரப்பிலிருந்து எம்.பிக்களை 'வாங்கிக் கொடுக்கும்' கைங்கரியத்திலும் முழுமூச்சாக ஈடுபடுகின்றார் அவர் - என்றெல்லாம் கூறப்படுகின்றது. இப்படி விமர்சிப்பவை, நிருபம் சென் கூறுவது போன்று 'வேறு வேலையில்லாமல் அவருக்கு எதிராகப் புறங்கூறும்' தமிழ் ஊடகங்கள் அல்ல. இத்தகைய தகவல்களை வெளியிடுபவை தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகைகள்.

நிருபம் சென்னின் இந்த 'அளப்பரும்' பங்களிப்புக்கு மத்தியிலேயே இதுவரை கிடப்பில் போடப்பட்டிருந்த இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கான விவகாரம் தூசிதட்டி எடுக்கப்பட்டு முழுமூச்சாக ஆராயப்படுகின்றது. எப்போதுமே அமைதி முயற்சிகளுக்கு கால்தடக்குப் போடும் வகையில் கருத்து வெளியிட்டு வரும் லக்ஷ்மன் கதிர்காமர், இப்போதும் அதே வழியில் இந்த இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்த விவகாரத்தை விரைவுபடுத்தி செயற்படுத்த முழுமுனைப்புக் காட்டுகின்றார்.

மறுபுறம் அமெரிக்க உதவியுடன் இலங்கை இராணுவத்துக்குள் அமைதிப்படை என்ற பிரிவை ஆரம்பிக்கும் நடவடிக்கை தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. 'அமைதிப்படை', 'ஐ.நா.படை' என்ற பெயர்களில் பல நாடுகளில் கால்வைத்துப் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுவரும் அமெரிக்காவுக்கு அத்தகைய நாடுகளில் ஒன்றில் உதவுவதற்காக இலங்கையிலிருந்து சுமார் 750 படையினரைக் கொண்ட அணியொன்றை அனுப்பி வைக்கவும் இலங்கை அரசு தீர்மானிக்கப் போவதாகக் கூறப்படுகின்றது.

இதன்மூலம் பதிலுக்கு ஆக்கபூர்வமான - பெறுமதியான - இராணுவ உதவிகளை, புலிகளைத் தோற்கடிக்கும் வகையில் பெற்றுக்கொள்ளலாம் என்பது இலங்கை அரசின் எண்ணம் போலத் தோன்றுகின்றது.

- இப்படி இரு தோணிகளில் கால்வைப்பது, அரசின் நடவடிக்கைகளை முழுத்தோல்விக்குள் ஆழ்த்தும் என்பதை அரசு உணர்வது நல்லது. அத்தோடு அது விபரீத விளைவுகளையும் ஏற்படுத்தும்.

# பத்திரிகையாளரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்!

## பத்திரிகைத்துறைச் சமூகம் அறிக்கை

கொழும்பு,ஜூன்7

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் இரக்கமற்ற கொலையானது, குழப்பம் நிறைந்த பிரதேசங்களில் பணிபுரியும் ஊடகவியலாளர்கள் எவ்வளவு கஷ்டமான, அபாயகரமான சூழ்நிலைகளில் பணிபுரிகிறார்கள் என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் கழகம், இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பத்திரிகைத்துறைச் சமூகம் ஆகியவை கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை வாசிப்போருக்குத் தகவல்களைக் கொடுப்பதற்காகத் தமது அன்றாட கடமைகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் பத்திரிகையாளர்கள் இந்த நிலைக்கு ஆளாகிறார்கள். இச்சம்பவம் குறித்து பத்திரிகைத்துறைச் சமூகமும், பத்திரிகை ஆசிரியர்களின் கழகமும் மிகவும் கவலையடைந்துள்ளன. சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரத் தரப்பினால் இன்னமும் இச்சம்பவத்தில் தொடர்புடையவர்களைக் கண்டுபிடிக்கமுடியாமல் இருப்பது குறித்து நாம் மிகுந்த கவலையடைந்துள்ளோம். இந்த விடயம் தொடர்பாக அரசியல் தலைமைகளும், அரசுத் தலைவர்களும் இன்னமும் மௌனம் சாதித்துவருவதையும் நாம் கவலையுடன் அவதானித்து வருகின்றோம்.

இவ்வாறு தெரிவிக்கும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நடேசனின் கொலை பற்றி விரிவான விசாரணை நடத்தப்பட வேணடும். நாட்டின் எந்தப் பகுதியில் கடமை புரிந்தாலும் பத்திரிகையாளர்கள் பாதுகாப்புடன் பணியாற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும். பத்திரிகையாளன் மீது நடத்தப்படும் தாக்குதலானது ஜனநாயகத்தின் மீதும் கருத்துச் சுதந்திரத்தின் மீதும் நடத்தப்படும் தாக்குதலாகும். ஒரு பத்திரிகையாளனின் கொலை சுதந்திர சமூகத்தின் அடிப்படையான இரு உரிமைகள் மீதும் நடத்தப்பட்டுள்ள மரண அடியாகவே கருதவேண்டும். இந்தச செயலைப் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் இந்த நாட்டில் சுதந்திரத்தை நேசிக்கும் சகல மக்களாலும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். இவர்கள் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## 'அறவழி' நிலைய வெள்ளிவிழா

சாவகச்சேரி,ஜூன்7

சாவகச்சேரி, கைதடி நுணாவிலில் உள்ள 'அறவழி' அரச சார்பற்ற நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு அதன் பணிமனை மண்டபத்தில் வைத்திய கலாநிதி டாக்டர் சு.கி.அருளானந்தம் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் மங்கள விளக்கினை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஏற்றிவைக்க தலைவர் சு.கி. அருளானந்தம் அறவழி நிலையக் கொடியை ஏற்றினார்.

நிகழ்வில் - தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன், பொது அமைப்புகளின் ஒன்றியத்தலைவர் எஸ்.பரமநாதன் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

நிலையத்தின் 25 ஆவது ஆண்டு விழாவைக் குறிக்கும் மலரும் வெளியிடப்பட்டது. இந்த மலரை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வெளியிட்டு வைத்தார். அறவழி நிலையத்தால் நடத்தப்படும் முன்பள்ளி பாடசாலைச் சிறார்களுக்கான அன்பளிப்புப் பொருள்களாக சீருடைத்துணிகள், கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. வெள்ளிவிழா நினைவாக அறவழி நிலைய வளாகத்தில் 25 தென்னம் பிள்ளைகளும் நடப்பட்டன.

நிகழ்வில் வரவேற்புரையை நிலைய முன்னாள் தலைவர் வி.ஜி.தங்கவேலு நிகழ்த்தினார். தொடர்ந்து நன்றியுரையை நிலையச் செயலாளர் க.ஜீவகதாஸ் நிகழ்த்தினார். நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஓ-31-117)

## சர்வதேச மாணவர் பேரவைக்கு புதிய தலைவராக பகீரதன்

யாழ்ப்பாணம்,ஜூன்7

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவராக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் ப.பகீரதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேசத் தமிழீழ மாணவர் பேரவையின் புதிய தலைவர் தெரிவு கடந்த மூன்றாம் திகதி வியாழக்கிழமை பேரவையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் மாணவர் பேரவை முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் மற்றும் மாணவர் பேரவை இணைப்பாளர் ந.கண்ணன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் புதிய தலைவராக யாழ். பல்கலைககழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் ப.பகீரதன் தெரிவுசெயயப்பட்டார்.

ப.பகீரதன் கடந்த சனிக்கிழமை தொடக்கம் மாணவர் பேரவையின் தலைவராகச் செயற்படுவார். இவர் கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் போன்ற நிகழ்வுகளிலும் ஏனைய இன விடுதலைக்கான அகிம்சை வழிப்போராட்டங்களிலும் முன்னின்று செயற்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (ஓ)

# உடன்பாட்டை மீறி இந்திய மீனவர் இலங்கைக் கடலில் பிரவேசிப்பு!

## மன்னார் கடற்றொழிலாளர்கள் குற்றச்சாட்டு

மன்னார்,ஜூன்7

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் மீண்டும் அத்துமீறி மீன்பிடித்து வருகின்றனர் என்று மன்னார்ப் பகுதி மீனவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்து வந்ததால் பிரச்சினை எழுந்தது.

இதனையடுத்து கடந்த மாதம் இரண்டு தரப்புகளுக்கும் இடையே பேச்சு நடந்து - உடன்பாடு ஒன்று எட்டப்பட்டது. ஆனால், இந்திய மீனவர்கள் அந்த உடன்பாட்டை மீறி வருகின்றனர் என்று மீனவர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் மீனவர் சங்கத் தலைவர் சொசான்பி தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் இப்போதும் வாரத்தில் மூன்று நாள்கள் இழுவைப்படகுகள் மூலம் எமது பகுதிக்குள் வந்து மீன்பிடித்துச் செல்கின்றனர்.

இவ்வாறு இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதனால் எமது மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து அவர்களுக்குத் தெரிவித்திருந்தோம். அதற்கு அவர்கள் எமது பகுதிக்குள் தாம் மீன்பிடிக்க அனுமதி கேட்டார்கள்.

முன்னர் செய்த ஒப்பந்தத்தை மீறி அவர்கள் தற்போது எமது பகுதிக்குள் வருவதை சுட்டிக்காட்டினோம்.

இவ்வாறு எமது பகுதிக்குள் நுழையும் மீனவர்கள் இராமேஸ்வரம், தங்கச்சிமடம், தனுஸ்கோடி, தாண்டவம் போன்ற பகுதிகளில் இருந்து வருகின்றனர். நூற்றுக்கணக்கான படகுகள் இப்படி வந்துபோகின்றன என்று மீனவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக நாங்கள் எமது மாவட்டக் கடற்றொழில் பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளோம். அடுத்தமாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கை மீனவர்கள் சார்பாக இந்தியாவிற்குச் சென்று, ஓர் ஒப்பந்தம் செய்வதாக கூறப்படுகிறது. ஆனால், அவ்வாறு குறிப்பிட்ட சில நாள்களிலேயே பேசிய பேச்சை இந்திய மீனவர்கள் மீறி உள்ளமையினால், நாம் எவ்வாறு அவர்களைப் போய்ச் சந்திப்பது என்ற கேள்வி எழுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக நான் - யாழ்.மாவட்ட கடற்றொழில் சமாசத் தலைவர் தவரட்ணம், வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் சூரியகுமார் ஆகியோரிடமும் தெரிவித்துள்ளேன். அவர்களும் இராமேஸ்வர மீனவர் சங்கத் தலைவரிடம் தெரிவிப்பதாகக் கூறியுள்ளனர் என்றார்.

எமது பகுதிக்குள்ளேயே எமது மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையானது இந்திய மீனவர்களின் தலையீட்டினால் மீறப்பட்டு வருகின்றது. இது எமது மக்களுக்கு ஒரு தீராத பிரச்சினையாகவே இருந்து வருகின்றது என்றார் அவர். (ஓ-6)

### நாளை

வைகாசி 26
செவ்வாய்க்கிழமை
(08.06.2004)
திதி: ஷஷ்டி
இரவு: 9.17 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
இரவு 10.12 வரை.
[illegible]: 10.22 - 12.52
[illegible]: 2.52 - 4.22
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

[illegible] சீர்பெற இருவர் தேவை, அதனைச் சீர்குலைக்க ஒருவர் போதும்.

# தகவல் தொழில்நுட்பத்துறைக்கு மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு

## மானியக்குழுப் பிரதித்தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்7

தகவல் தொழில்நுட்பத்துறையில் மாணவர்களின் எண்ணிக்கையை இவ்வருடம் அதிகரிப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தற்பொழுது 310 பேர் வரையிலான மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்துறையில் பயின்று வருகின்றார்கள். இந்த எண்ணிக்கையை அறுநூறாக உயர்த்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு விரும்புவதாக ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் பேராசிரியர் எல்.எல். ரட்நாயக்கா தெரிவித்துள்ளார். தற்பொழுது கொழும்பு, களனிய, பேராதனை மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில் நுட்பம் கற்பிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். இத்திட்டத்தை முன்னெடுக்க இந்தவருடம் ஒரு கோடி 9 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்றும் இதற்காகத் திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார். அடுத்த ஆண்டு இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 12 கோடி 9 லட்சம் தேவைப்படும் என்றும் கட்டட அமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களுக்காகவும் இப்பணம் பயன்படுத்தப்படும் என்றும் பேராசிரியர் கூறினார்.

இது மட்டுமின்றி, அடுத்த ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் உள்வாங்கலை பல்துறைகளிலும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 21 - 02 - 1911



இறப்பு 08 - 05 - 2004

**அமரர் விஸ்வலிங்கம் திலகராயர்** (J.P.)
(Ret. Executive, Brown & Co.Ltd., Colombo)

**அன்புக்கும் பண்புக்கும் ஆதரவாய் இருந்தீர்!**
**விருட்சமாய் விழுது விட்டு வேருடனே திகழ்ந்தீர்!**
**உடம்பு மறைந்தாலும் உங்கள் நினைவு மனதை விட்டு அகலாது.**

இன்று (07.06.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பாக்கிய இல்லம்,*
*51, சந்தன மாதா வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(C/32714)(38-21-14)


# LONDON LANGUAGE SCHOOL

**அனைவருக்கும் ஆங்கிலக் கல்வி**

**எமது குறிக்கோள் யாழ்.மக்களின் ஆங்கில அறிவை வளம்படுத்தி நவீன தொழில்நுட்ப உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்க வழிவகுத்தல். அங்கீகரிக்கப்பட்ட தகைமை வாய்ந்த ஆசிரியர் குழு.**

**V.MURUGATHAS** (B.Sc.Eng.(PIU), Dip.in.Comp.Eng, Info.Tech (Malaysia)
**A.S. DILAN** (Travel and Tourism (cambridge), Trained British Council Lecturer)
**T.UMESH** (B.B.A. (University of Jaffna), NDE, CIMA)
**Mrs.A.Armstrong** (B.A.Hons, Dip.in Computer)
**Mrs. M.Marjorie Do** (B.Sc. Nsg. University of ILOILO Philippines - Foreign staff)

*மேலும் பல பிறநாட்டு விரிவுரையாளர்கள்.*

*'BRITISH COUNCIL'* கற்றல், கற்பித்தல் முறைகள், ஆங்கிலத்தில் சரளமாகப் பேச, எழுத, வாசிக்க உகந்த நவீன இலத்திரனியல் கணனி உசாத்துணை உபகரணங்கள்

***கற்கை நெறிகள்***

**தரம் 1 முதல் 11 வரையுள்ள மாணவர்கள்**
**பல்கலைக்கழக மாணவர்கள்**
**உத்தியோகத்தர்கள்**
**வெளிநாட்டுக்குச் செல்லவுள்ளோர்**
**TOEFL, IELTS**
**G.C.E. A/L மாணவர்கள்**
**A/L (2004) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேட கற்கை நெறி.**

**புதிய பிரிவுகள் June மாதம் 19 ஆம் திகதி ஆரம்பம். இக் கற்கை நெறியில் பதிவுசெய்யும் மாணவர்களுக்கு பின்வரும் கணனிக் கற்கை நெறிகள்.**

**இலவசம்**

**Basic Computer Principles**
**Basic Computer Programming**
**MS. Office**

**June 13** ஆம் திகதி இலவசக் கல்விக் கருத்தரங்கு. பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

**9-10, 10-11, 11-12, 12-1, 2.30-3.30, 3.30-4.30.**

தொடர்புகளுக்கு:
0777 - 222300, 077 - 6176383, 0777 - 238605
774, **Hospital Road, Jaffna.**

(32779) (40-21-15)


## கணனி வகுப்பு இன்று ஆரம்பம்

யாழ். இந்து மகளிர் கல்லூரியின முறைசாரக் கல்விப் பிரிவின் கணனிக் கற்கை நெறி இன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும். மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவிகள் அனைவரையும் இதற்குச் சமுகமளிக்கும்படி கல்லூரியின் அதிபர் கேட்டுள்ளார்.

## நல்லுறவுக் கூட்டம்

தென்மராட்சி,ஜூன்7

பொலீஸ் - பொதுமக்கள் நல்லுறவை மேம்படுத்துவது தொடர்பான கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப 4 மணிக்கு கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுடன் நல்லுறவுகளைப பேணுவதுடன் கிராம மட்டத்தில் குற்றச் செயல்கள் நடைபெறுவதைத தடுக்கும் நோக்கத்துடன் சாவகச்சேரி பொலீஸாரினால் இத்தகைய கூட்டங்கள் கிராம ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஒ-117)

## பொது நிர்வாகக் கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில இடம்பெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான அனுமதிக் கடிதம தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் பீடாதிபதி அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். (ஒ-12)

## பேருந்துச் சேவையை மறவன்புலோவுக்கு நீடிக்கக் கோரிக்கை

கொக்குவில்,ஜூன்7

கைதடி நாவற்குழி பகுதிக்குச் சேவையில் ஈடுபடும் பேருந்துச் சேவையை மறவன்புலோவரை விஸ தரிக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை முகாமையாளரைக் கேட்டுள்ளார்.

சாலை முகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்ட மறவன்புலவு, கைதடி, நாவற குழி ஆகிய பகுதிகளில் 96 குடும்பங்கள் மீளக்குடியமர பதிவுசெய்து 53 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. இம்மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு போக்குவரத்து நெருக்கடியை எதிர் நோக்குகின்றனர்.

இதனால் தங்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினூடாக 809 இலக்க பாதையினூடாகக் கைதடி நாவற்குழிப் பகுதிக்குச் சேவையிலீடுபடும் பேருந்தின் சேவையை மறவன புலவு பகுதி வரை விஸ்தரிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யவும் எனக் கூறப்பட்டுள்ளது. (ஒ-76)


### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
12, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459

(32783)



TRRO C.T.C

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
## TRRO Computer Training Center

மீண்டும் ஒரு சந்தர்ப்பம். சகல கற்கை நெறிகளுக்கான ஆரம்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

**Certificate Courses**

- Microsoft Word XP
- Microsoft Excel XP
- Microsoft Access XP
- Microsoft Visual Basic 6.0
- CorelDRAW 11
- Adobe Page Maker 7.0
- Photoshop 7.0
- Accounting Pakages
- Kids Courses

புதிதாக வகுப்புக்களில் இணைய விரும்புபவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை உறுதிப்படுத்தவும்.

மேற்படி கற்கைநெறிகள் நடைபெறும் இடங்கள்.
(விண்ணப்பப் படிவங்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106. 4ஆம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம்.
☎ : 021 - 222 2416

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
(MC Lead Hospital) கே.கே.எஸ் வீதி.
இணுவில். ☎ - 071-2307628

இன்னாசித்தம்பி பரியாரியார் வளவு , கதிரமலை கோவிலடி, சில்லாலை.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



அமரர்
**விஜயரெட்ணம் இறங்கநாதசாமி**
வல்வெட்டித்துறை

பிறப்பு 27.04.1926 மறைவு 21.05.2003

08 - 06 - 2004

அன்புக்கு விளக்கேற்றி
அறங்காத்த அன்புறவே!
பண்புக்குப் பாடந்தந்து
பார் போற்ற வைத்தவரே!
வஞ்சம் காணாத்
வதனம் கொண்டவரே!
நெஞ்சம் மறந்திடுமா? ~ நின்
நினைவுகளை இழந்திடுமா? ~ நின்
சாவு எமையும் சாகடிக்கின்றதையா! ~ நின்
சொந்தங்கள் இங்கே
சோகக் கடலிலே!

அன்னாரின் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (08.06.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விலும் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(32724)(34-21-14)

*உடையா மணல்,*
*வல்வெட்டித்துறை.*

**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 11 - 1931



மறைவு 21 - 05 - 1992

அமரர் **க.லம்போதரன்**
(ஓய்வுபெற்ற அரச கணக்காளர்)
**திதி: 07.06.2004**

**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்**
**மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்**

வீடுபேறு பெற்ற உத்தமர் என்றும் எங்களுக்கு துணையாய் இருக்க விநாயகப் பெருமானையும் வீரபத்திரரையும் வேண்டும்

**- குடும்பத்தினர்.**

**124/4, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

(32388)(34-21-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று பெட்டிகளில் 12 கோடி ரூபா கைமாறியது!

**5**

**நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி வரலாறு காணாத விதத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிவாகைசூடிச் சரித்திரம் படைத்துள்ளது. இந்த வெற்றிக்கான காரணங்களையும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பரிதாபத் தோல்விக்கான காரணங்களையும் தேர்தல் நடைபெற்றவேளையில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த 'உதயன்' சிறப்புப்பிரதிநிதி "கஜனி" அலசி ஆராய்கிறார்.**

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் 500 இற்கும் அதிகமானோர் தேர்தல் களத்தில் இருந்தபோதிலும், தி.மு.க.கூட்டணி மற்றும் அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர்களிடையே மாத்திரம் போட்டி நிலவியது. ஒரு வேட்பாளர் 25 லட்சம் ரூபாவரை தேர்தல் செலவுகளை மேற்கொள்ளலாம் என தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளபோதிலும், தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த வேட்பாளர்கள் பலரிடம் அவ்வளவு நிதி வசதிகள் இருக்கவில்லை. ஒரு சிலருக்கு தனிநபர்களும் ஒரு சில பொது அமைப்புக்களும் உதவின. களத்தில் வேட்பாளரிடம் உள்ள நிதி மற்றும் அவர் தொண்டர்களுக்கு செய்யும் செலவுகள் ஆகியன வாக்காளர்களை வசீகரிப்பதற்கு இன்றியமையாத ஒன்றாக விளங்கியது.

ஆனால், அ.தி.மு.க. - பா.ஜ. கட்சி வேட்பாளர்களுக்கு நிதி ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. பெரியகுளம் தொகுதியில் பணம் பிரவாகம் எடுத்து ஓடியதாகச் செய்திகள் தெரிவித்தன. அ.தி.மு.க. போட்டியிட்ட அத்தனை தொகுதியிலும் வாக்காளர்களை, எதிரணிப் பேச்சாளர்களை, எதிரணி முக்கியஸ்தர்களை கவர்வதற்கு நிதி பயன்படுத்தப்பட்டதாக பல்வேறு நாளிதழ்களும் சஞ்சிகைகளும் தெரிவித்தன. இது தொடர்பாகத் தமிழகத்தில் வெளியாகும் வார இதழ் ஒன்றில் வெளியான கட்டுரையின் குறிப்பிட்ட பகுதியைக் கீழே தருகிறோம்.

"நெல்லை ஆரியாஸ் ஹோட்டல்... தென் மாவட்ட விஜயத்தின்போது அங்கே தங்கியிருந்த ஜெயலலிதா தனது அறைக்கு அமைச்சர்களான நயினார் நாகேந்திரன், அனிதா ராதாகிருஸ்ணன் மற்றும் தென்காசி வேட்பாளர் முருகேசன் ஆகியோரை அழைத்தார். மூன்று பெட்டிகளை நோக்கி ஜெயலலிதா விரல் நீட்ட அவர்களின் தலைகள் அந்தப்பக்கம் திரும்பின.

"இந்த மூன்று பெட்டிகளும் தலா நாலு கோடி ரூபா இருக்கும். நெல்லை, தென்காசி, திருச்செந்தூர் ஆகிய மூன்று தொகுதிகளிலும் நாங்கள்தான் ஜெயிக்கனும். அப்படி ஜெயிக்க வைப்பதானால் இந்த மூன்று பெட்டிகளையும் எடுங்கள். ஏதாவது தொகுதியில் நாங்கள் தோற்க நேர்ந்தால் அதேபெட்டியை இரண்டு மடங்கு தொகையுடன் திருப்பித்தரனும்."

எனத் திடுக்கிடும் விதத்தில் ஜெயலலிதா நிபந்தனைகளை விதிக்க, பல வித சிந்தனைகளின் பின்னர் அவர்கள் மூன்று பெட்டிகளையும் பொறுப்பேற்றனர் என அந்த வார இதழ் தெரிவித்தது.

இதில் ஒரு பெட்டியில் இருப்பதாகக் கூறப்பட்ட 4 கோடி ரூபா என்பது தேர்தல் விதிகளின்படி 12 வேட்பாளர்கள் மேற்கொள்ளக் கூடிய அதிக உச்சத் தேர்தல் செலவினமாகும்.

பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் வெளிவந்த தகவல்கள் எவ்வளவு தூரம் உண்மையானவை எனக் கூறமுடியாவிட்டாலும் அந்த மூன்று பெட்டிகளில் இருந்த 12 கோடி ரூபாவானது தமிழ் நாட்டில் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து அ.தி.மு.க. உறுப்பினர்களுககு (33 பேர்) தேர்தல் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அதி உச்ச செலவினமான 8.75 கோடி ரூபாவுக்கும் (25X33) அதிகமானதாகும். இந்த மூன்று தொகுதிகளும் அ.தி.மு.கவுக்கு பெரிய அளவில் கௌரவப்பிரச்சினை அற்ற தொகுதிகளாகும். அ.தி.மு.க. போட்டியிட்ட இன்னும் 30 தொகுதிகள் உள்ளன. அவற்றுள் பெரியகுளம், தென்சென்னை போன்ற தொகுதிகள் பற்றிய நிதி நிலைவர விவரங்களைப் பற்றிய தகவல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிவந்த வண்ணமே இருந்தன. என்ன கூத்தாடினாலும், தலைகீழாக நின்றாலும் விலை போவதில்லை என்ற தமிழக மக்களின் முடிவுக்கு முன்னர் அழைத்தும் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டன.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது சொத்துக்களைப் பிரகடனப்படுத்தவேண்டும் என்பது தேர்தல் ஆணையகத்தின் கட்டாய நிபந்தனை. தமிழ் நாட்டில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிகக கூடிய சொத்துக்களைப் பிரகடனப்படுத்தியவர் சிவகங்கைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட ப.சிதம்பரம் ஆவார். அவர் வெளிப்படுத்திய சொத்துக்களின் (குடும்பத்தின்) பெறுமதி 15 கோடியாகும் (இவர் தற்போது இந்திய நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், தனது வெற்றிக்காகப் பலகோடிகளைச் செலவிட்டார் எனக் கூறப்படும் பெரியகுளம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட டி.டி.வி. தினகரன் பிரகடனப்படுத்திய சொத்தின் பெறுமதி 4 கோடி மட்டுமே.

இந்தத் தினகரனுக்கு எதிராக அன்னியச்



சுகவனம்

செலவாணி மோசடி வழக்கொன்று நடைபெற்றது. அந்த வழக்கில் தினகரனைக் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் அவருக்கு 28 கோடி ரூபா அபராதம் விதித்தது. அதை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்துள்ளார்.

அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவாயினும் சரி அக்கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் சரி அவர்கள் கோடீஸ்வர ஏழை பங்காளிகளே.

ஜெயலலிதா தனது அணியின் வெற்றி குறித்துச் சிந்தித்துச் செயற்படவில்லை என்பதற்கு மற்றுமோர் உதாரணத்தை இங்கே குறிப்பிடுகிறோம். 1996இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து சுகவனம் என்னும் இளைஞர் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு ஜெயலலிதாவைத் தோற்கடித்தார். இது ஜெயலலிதாவின் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஓர் அடியாகும்.

அன்று பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் ஜெயலலிதாவைத் தோற்கடித்த சுகவனம், இம முறை கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டார். 1996இல் ஜெயலலிதாவை சுகவனம் தோற்கடித்தபோது "யானையின் காதில் புகுந்த எறும்பு" என கருணாநிதி அவரை வர்ணித்தார்.

எனவே, என்னவிலை கொடுத்தாவது சுகவனத்தைத் தோற்கடித்தேயாகவேண்டும் என ஜெயலலிதா திட்டமிட்டார். அங்கும் ஒரு "சூட்கேஸ்" அனுப்பப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிததன ஆனால், கிருஷ்ணகிரித் தொகுதி தேர்தல் முடிவுகள் உங்களுக்குத் தெரிந்ததே.

தென் சென்னையில் தி.மு.க. வேட்பாளர் டி.ஆர். பாலுவை எதிர்த்து ஜெயலலிதாவின் பள்ளித்தோழி பதர் சயித் போட்டியிட்டார். தென் சென்னைத் தொகுதியில் டி.ஆர். பாலு மிகப் பிரபலமானவர். தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமல்ல மத்திய அமைச்சராகவும் இருந்து பல்வேறு சேவைகளைத் தொகுதிக்கு வழங்கியுள்ளார். எனவே டி.ஆர். பாலுவைத் தோற்கடிப்பது என்பது இலகுவான விடயமல்ல.

ஆனால், பதர் சயித் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், "நான் வெற்றிபெறுவேன் என்ற திடமான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. காரணம் நாடாளுமன்ற உறுப்பினராவதறகு எவரையும் விட எனக்கே தகுதி அதிகம் இருக்கிறது" எனத் தெரிவித்தார்.

'த நியூ இந்தியன் எக்ஸ்பிறஸ்' (THE NEWINDIAN EXPRESS) ஒரு தென் சென்னைத் தொகுதி குறித்த தனது விமர்சனத்தில் பதர் சயித் பற்றி பின்வருமாறு தெரிவித்தது.

"அ.தி.மு.க. வேட்பாளர் பதர் சயித் எப்படிப் பட்டவராக இருக்கிறார்? வெளியுலகம் பற்றி அறியாது, பட்டு இளைகளாலான கூண்டுக்குள வளரும் கூட்டுப் புளு போல - வசதிமிக்க வாழ்வும் சாதாரணமக்களுடன் சரிசமமாகப் பழகி அறியாதவராக இருக்கிறார்" என விமர்சித்தது.

அந்த ஏட்டின் விமர்சனம் மிகச் சரியானதே என்பதை தென் சென்னைத் தொகுதி தேர்தல் முடிவு உறுதிசெய்தது.

பதர் சயித்தைப் போலவே ஏனைய அ.தி.மு.க. வேட்பாளர்களும் தங்களைப்பற்றிப் பெரிதாக மதிப்பீடு செய்து மனக்கோட்டை கட்டியிருந்தனர்.

ஜெயலலிதா இரண்டுமுறை ஆட்சிக்கு வந்ததற்கு காங்கிரஸ் கட்சியே முக்கிய காரணமாகும். ராஜிவ காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து உருவான அனுதாப அலை காரணமாக 1991 இல ஜெயலலிதா ஆட்சியைக் கைப்பற்றினார். அதன் பின்னர் 2001 இல் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டமைத்து ஆட்சிக்கு வந்தார்.

2004 இல் பா.ஜ. கட்சியுடன் தேர்தல் கூட்டு அமைக்கும்வரை காங்கிரஸ் கட்சியும் அதன் தலைவர்களான ராஜீவ்காந்தி மற்றும் சோனியா காந்தி ஆகியோர் நல்லவர்களாக - சிறந்தவர்களாக - நேர்மையானவர்களாக - தகுதியானவர்களாக ஜெயலலிதாவுக்கு விளங்கினர்.



பதர் சயித்

ஆனால், 2004 இல் பா.ஜ.கட்சியுடன் தேர்தல் கூட்டு அமைத்தவுடன் காங்கிரஸ் கட்சி மற்றும் சோனியா காந்தி குறித்த ஜெயலலிதாவின் கருத்துக்கள் தலைகீழாக மாறின.

சோனியா காந்தி வெளிநாட்டவர். வெளிநாட்டவர் ஒருவருக்கு இந்த நாட்டை ஆள வாய்ப்பளிக்கலாமா? வாஜ்பாய் மண்ணின் மைந்தர். மண்ணின மைந்தருக்கே நாட்டை ஆள வாய்ப்பளிக்க வேண்டும். சோனியாவுக்கு எதுவித அரசியல் அனுபவமும் இல்லை. அவர் ஒரு கத்துக்குட்டி. அரை வேக்காடு என்ற விதத்தில் தனது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டார். வாக்குரிமை உள்ள எவரும் தேர்தலில் போட்டியிட முடியும். தேர்தலில் போட்டியிட்ட எவரும் அமைச்சராகவோ இல்லை நாட்டின் பிரதமராகவோ முடியும். சட்டம் இவ்வாறு கூறும்போது - சட்டம் இவ்வாறு அனுமதிக்கும்போது சோனியா காந்தி குறித்து ஜெயலலிதா கூறிய வாதங்கள் ஒருபுறத்தில் சட்ட வலுவற்றனவாகவும் மறுபுறத்தில் தனிப்பட்ட விதத்திலான தாக்குதல்களாகவும் அமைந்தன.

ஜெயலலிதாவின் குதர்க்கமான கூற்றுக்கள் மக்களைக் கவரவில்லை. மாறாக மக்கள் அவர் மீதே அந்த வாதங்களைத் திருப்பினர். ஜெயலலிதா கர்நாடக மாநிலத்தில் பிறந்தவர். ஆந்திர மாநிலத்தில் மணமுடித்தவர். ஒன்றில் அவர் பிறந்தகத்திற்கு (கர்நாடகத்திற்கு) உரிமை கோரலாம். அன்றேல் புகுந்தகத்திற்கு (ஆந்திராவுககு) உரிமை கோரலாம். தமிழகத்தை ஆள ஜெயலலிதாவிற்கு என்ன உரிமை இருக்கிறது என ஒரு சிலர் வாதிட்டனர்.

ஜெயலலிதாவின் இந்த தேவையற்ற கருதது நாட்டின் பல பகுதிகளில் சர்ச்சையைக் கிளப்பியது. ராமர் அயோத்தியில் பிறந்தார் எனவும், கிருஷ்ணர் மதுராவில் பிறந்தார் எனவும் கூறப்படுகிறது.



டி.ஆர்.பாலு

(இந்த மதுரா என்னுமிடம் வாஜ்பாய் போட்டியிட்ட லக்னோ தொகுதிக்கு ஒரு சில மைல் தூரத்திலுள்ளது) கிருஷ்ணன் அவதரித்த அந்த மதுராபுரியில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் ஒன்றில் சோனியா உரையாற்றினார்.

அங்கு கூடியிருந்த மக்களின் நெஞ்சங்களைத் தொடும் விதத்தில் சோனியா உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பலரைப் பேட்டிகண்டு அந்தப் பேட்டிகளை "தி ரெலிகிராப்" என்ற நாளேடு பிரசுரித்தது.

அந்தப் பத்திரிகைக்கு சமஸ்கிருத பண்டிதரும வேத விற்பன்னருமான லட்சுமி நாராயணன் உபாத்தியாயர் என்பவர் பேட்டியளித்திருந்தார். அவர் தனது பேட்டியில், "சோனியா அந்நியர் என்பது தவறான கருத்து. மகாபாரதத்தில் வரும பாஞ்சாலி என்கிற திரௌபதையை நாம் எல்லோரும் பாராட்டுகின்றோம். அவர் என்ன இந்தியாவிலா பிறந்தார். திரௌபதை கண்டகாரில் (ஆப்கான்) அல்லவா பிறந்தார். அப்படியானால் திரௌபதையும் அந்நியரல்லவா? என வினா எழுப்பியுள்ளார்.

தங்கள் தரப்பிற்கு ஆதரவைத் திரட்டுவதற்காக ஜெயலலிதா மற்றும் நரேந்திரமோடி போன்றோர் சோனியா குறித்து தவறான பிரசாரங்களை மேற்கொண்டதானது நாட்டில் முதலில் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பவில்லை. ஆனால், தேர்தல் நெருங்கிய வேளையில் இத்தகைய பிரசாரங்கள் சோனியாவுக்குச் சாதகமான ஓர் அலையாக உருவெடுத்தன என்பதை 3ஆம் கட்டக் கருத்துக் கணிப்புகள் தெளிவாக்கின.

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களை அனுமதிக்கும்போது பிறந்த இடம், திருமணம் புரிந்த இடம் மற்றும் புதைபொருள் ஆராய்ச்சிகளில் இறங்கி நேரத்தையும் கௌரவத்தையும் வீணடித்தற்குப் பதிலாக தனது அரசின் சாதனைகளை மட்டும் எடுத்துக்கூறியிருந்தால் தமிழ் நாட்டில் மட்டுமல்ல தேசிய அளவிலும் இவவளவு தூரத்திற்கு அகௌரவம் ஏற்பட்டிருக்காது. தனது அரசின் சாதனைகளை எடுத்துக்கூற ஜெயலலிதாவிடம் என்ன இருக்கிறது. அவரது அரசின் சாதனைகள் அனைத்தையும் எதிர்க்கட்சிகள் அல்லவா பட்டியலிட்டு எடுத்துக்கூறின.

(வளரும்)

## தமிழகத் தேர்தல் வெற்றி: உள்ளிருந்து வரும் பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழாவில்...






இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பல்வேறு துறைகளில் படைப்புக்களை வெளியிட்டோர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். விழாவில் மூதறிஞர் சிற்பி சிவ.சரவணபவன் பரிசில்களை வழங்கினார். வெளிமாவட்டங்களைச் சேர்ந்த படைப்பாளிகள் முறையே (வலம் இருந்து இடமாக) சாரல் நாடன், ப.ஆப்டீன், அமரதாஸ், மேமன் கவி, ஜின்னா சரிபுத்தீன், எஸ்.முத்துமீரான், ஏ.எஸ்.உபைத்துல்லா, இக்பால் அலி ஆகியோர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும், யாழ். இலக்கிய வட்டச் செயலாளர் புத்தொளி ந.சிவபாதம், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், இலக்கியப் பேரவையின் தலைவர் செங்கை ஆழியான் க.குணராசா, இலக்கியப் பேரவையின் செயலாளர் செம்பியன் செல்வன் ஆகியோர் (இடமிருந்து வலமாக) மேடையில் அமர்ந்திருப்பதையும், படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*






# போராட்டம் சார்ந்த படைப்புகளுக்கு இலக்கிய உலகில் என்றும் முதன்மை இடம்

## இலக்கியப் பேரவை பரிசளிப்பு விழாவில் செங்கை ஆழியான் உரை

யாழ்ப்பாணம்,ஜூன்7

ஈழத்து இலக்கிய உலகில் தமிழீழ விடுதலைப் போராட்டம் சார்ந்த போரியல் இலக்கியங்களுக்கு முதன்மையான இடம் என்றும் உண்டு.

- இவ்வாறு தெரிவித்தார் மூத்த எழுத்தாளர் 'செங்கை ஆழியான்' க.குணராசா.

நேற்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இலங்கை இலக்கியப் பேரவையின் 1997 - 2002 பரிசளிப்பு விழா இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எமது சமூகத்தில் எழுத்துத் துறையில் ஈடுபடுகின்றவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்படுவதில்லை. இது வேதனைக்குரியது. இதேவேளை, இலக்கிய கர்த்தாக்கள் வாசகர்களிடம் தமது படைப்புகள் சென்றடையும் வகையில் இலக்கியங்களைப் படைப்பதில்லை.

இந்நிலையில், ஈழத்து இலக்கிய உலகில் போர்க் காலங்களில் பிறந்த போர் இலக்கியங்கள் வரலாறு கூறும் ஆவணங்களாக மிளிர்கின்றன. இலக்கிய வரம்புக்குள் போர் இலக்கியங்கள் அடங்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதிலும், காலத்தின் தேவையறிந்து வெளிவந்த இலக்கியப் படைப்புக்கள் வாசகர்களிடம் சென்றடைந்துள்ளன. அந்த வகையில் மாவீரர் மலரவனின் "போர் உலா" தமிழ் கவியின் "இனிவானம் வெளிச்சிடும்" என்பன போன்ற போர் இலக்கியப் படைப்புக்கள் பாராட்டப்பட வேண்டியவை -என்றார்.

### நல்லை ஆதீனம்

இந்நிகழ்வில் நல்லைக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தனது ஆசியுரையில், இருபது ஆண்டுகாலப் போரின் ஊடாகப் பிறந்த ஈழத்து இலக்கியங்கள் மக்களின் வாழ்வியல் துன்பங்களை உலகிற்கு எடுத்துக் கூறுகின்றன - என்றார்.

### சிற்பி

பரிசளிப்புரையாற்றிய சிற்பி சிவ. சரவணபவன் கூறியதாவது:-

உண்மையான இலக்கியப் படைப்புக்களை மக்கள் என்றும் ஏற்றுக் கொள்வார்கள். இந்நிலையில், நல்ல படைப்புக்களை இலக்கியப் படைப்பாளர்கள் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அத்துடன், நல்ல படைப்புக்களை வளர்க்க எழுத்தாளர்கள் பயன்படவேண்டும். எழுத்தாளர்கள் நல்ல பண்புகளை வளர்க்கப் பாடுபட வேண்டும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கூட போர் இலக்கியங்கள் உந்து சக்தியாக இருக்கின்றன.

எனவே, இலக்கியப் படைப்பாளிகள் தங்கள் இலக்குகளை அடையும் வரை ஓயக்கூடாது. சமூகத்தின் மிகப் பெரிய பொறுப்பு இலக்கிய வாதிகளிடம் உள்ளது. சமூகத்தை நல்ல ஒழுங்கில் வழிகாட்டிச் செல்வது இலக்கிய வாதிகளின் பணியாகவுள்ளது.

இலக்கியங்கள் அழகாக இருக்க வேண்டும், இனிமையாக இருக்க வேண்டும், பண்புடையதாக வாசகனை நல்லவனாக மாற்ற வழி காட்ட வேண்டும், வாசிக்க வாசிக்க மேன் மேலும் சிந்திக்கத் தூண்ட வேண்டும் அப்போது தான் வாசகர்களிடம் இலக்கியப் படைப்புகள் இலகுவாகச் சென்றடையும்

நல்ல இலக்கியப் படைப்புகளுக்கு விளம்பரங்கள் தேவையில்லை. வாசகர்களே நல்ல இலக்கியப் படைப்புகளைத் தேடித் தேடித் தெரிவு செய்து கொள்ளவார்கள் - என்றார்.

### ஆறு. திருமுருகன்

சிறப்புரையாற்றிய செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தமது உரையில் தெரிவித்ததாவது:-

இலக்கியப் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளை விற்பனை செய்வதில் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றனர்.

இலக்கியப் படைப்புக்களை வெளிக்கொணரபலம் இல்லாதவர்களாக உள்ளனர்.

இலக்கியப் படைப்புகளுக்கு ஊக்கம் கொடுக்கும் இயல்பும் நன்றிமறவாத பண்பும் எம்மிடம் அருகிவருகின்றன.

இது தவிர்க்கப்பட்டு நல்ல முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பவர்களாக நாம் இருக்க வேண்டும் - என்றார்.

உரைகளைத் தொடர்ந்து பரிசளிப்பு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மலையகம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து வருகைதந்த இலக்கியப் படைப்பாளர்கள் தமது பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர்.

விழாவுக்கு இலக்கிய கர்த்தாக்கள், இலக்கிய ஆர்வலர்கள் என்று பெரும் எண்ணிக்கையாளோர் திரண்டிருந்தனர். (அ-ஒ-12)

## பேராசிரியர் நந்திக்கு மலையக எழுத்தாளர்கள் கௌரவம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

மலையக இலக்கியத்திற்கு பெரும் பணியாற்றிய யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

நேற்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் இடம்பெற்ற இலங்கை இலக்கியப் பேரவை பரிசளிப்பு விழாவின் போது மலையகத்தில் இருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர்கள் இக்கௌரவத்தைச் செய்தனர்

மலையகத்தின் மூத்த எழுத்தாளர் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரத்துக்கு மலையக எழுத்தாளர்கள் சார்பாக பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். (4-12)

## சிறுவர் அரங்கப் பயிற்சி

செயல்திறன் அரங்க இயக்கம் நடத்திவரும் சிறுவர் அரங்கப்பயிற்சியின் இரண்டாவது பிரிவு விரைவில் ஆரம்பமாகவிருக்கின்றது.

ஆர்வமுடைய இளைஞர், யுவதிகள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

4 மாதங்கள் கொண்ட இப்பயிற்சி நெறி தொடர்பான மேலதிக விவரங்களை 'அருளகம்' ஆடியபாதம் வீதி - திருநெல்வேலி என்ற முகவரியிலுள்ள தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்று கொள்ளலாம் என்றும் செயற்திறன் அரங்க இயக்கம் அறிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் கல்விசார் பிரச்சினைகளும் அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டங்களும்

**யாழ். குடாநாட்டில் கல்வித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அதனை நிவர்த்திசெய்து கல்வித்துறையை அபிவிருத்தி நோக்கி முன்னெடுப்பதற்கு செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்கிறது இக்கட்டுரை.**

**03.05.2004 திகதிய உதயனில் இக்கட்டுரையின் நான்காம்பகுதி பிரசுரமாகியிருந்தது. அதன் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.**

★ நூலகக் கணனி வசதி மற்றும் விடுதி வசதியை விரிவாக்குதல்.

★ முன்பள்ளியை அபிவிருத்தி செய்யும் வகையில் ஆசிரியர்களுககு பயிற்சி ஊதியம் வழங்குதல் மற்றும் உபகரணம், பௌதிக வள விரிவாககம், முன்பள்ளி வளநிலையம் நிறுவல் என விரிவுபட்டு வருவதைக் காண முடிகின்றது.

★ தொழிற்பயிற்சியை விரிவுபடுததும் வகையில் தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA), கிராமிய தொழிற்பயிற்சி நிலையம் (RVTC), மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் (DVTC), தேசிய தொழிற்பயிற்சி நிலையம் (NVTC), உயர்தொழில்நுட்ப நிறுவனம (ATI) தொழில்நுட்பக் கல்லூரி, தேசிய இளைஞர் சேவை மன்றம், விவசாய பயிற்சிநிலையம், கணனி பயிற்சி நிலையங்கள், பற்றீஸியன் தொழிற்பயிற்சி நிலையங்களின் விரிவாக்க செயற்பாடுகளில் அதிகளவில் இடம்பெறுதல்.

★ ஆங்கிலமொழி மேம்பாட்டில் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் பணியாற்றி வருவதுடன், பிரதேச ஆங்கிலமொழி ஆதார நிலையம் (RESCS), திறந்த பல்கலைக்கழகம், அரசசார்பற்ற நிறுவனம் என்ற வகையில் பன்முகப்பட்ட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன எனலாம.

### யாழ்ப்பாண புனரமைப்பும் கல்வி பற்றிய தேசியக் கொள்கையும்

யாழ்ப்பாணத்தின் கல்வித்துறையின் புனரமைப்பு ஒரு புதிய வாய்பபு எனக் கருதப்பட வேண்டும். இதன் மூலம்- அபிவிருத்தித் தேவைகளை புதிய கல்விச் சீர்திருத்தங்களுடன் எம்மால் இணைக்க முடிவதுடன் கல்வி முறையிலுள்ள பலவீனங்களைப் போக்குவதற்கான வழிமுறைகளை மேற கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த நாடு அதனது கல்வியமைபபு முறை மூலமாகவும் சமூக சேவைகளை வழங்குவதன் மூலமாகவும் தனது சொந்த மக்களில் முதலீடு செய்கின்றது. தேசிய திட்டத்தில் அபிலாசை தரும் இலக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வி வழங்கலின் தேறிய வீதம் 2000 ஆம் ஆண்டில் 96 வீதத்தில் இருந்து 2005 இல் 100 வீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் வீதம் கிட்டத்தட்ட 85 வீதமாக இருக்கும். அதிகமான மாணவர்கள் கணனி அறிவு பெற்றவர்களாக இருப்பார்கள். 2001ஆம் ஆண்டில் கணனி அறிவுபெற்ற 5 வீதமான மாணவர்களுடன் ஒப்பிடுகையில் 2005 ஆம் ஆண்டளவில் கிட்டத்தட்ட மாணவர்களில் அரைப்பகுதியினர் கணனி அனுபவமுடையவர்களாக இருப்பார்கள். இப்பெறுபேறுகளை வழங்குவதற்கு அதிகளவு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இருப்பர். கல்லூரிக் கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமானதாக இருக்கும். அத்துடன், அதிக உபகரணங்களைக் கொண்ட பாடசாலைகள கூடுதலாக இருக்கும். 59 வீதமாக இருக்கின்ற பயிற்றப்பட்ட ஆசிரியர்களின எண்ணிக்கை 2005 ஆம் ஆண்டில் 90 வீதமாக அதிகரிக்கும்.

2005 ஆம் ஆண்டளவில் பாடசாலைகளில் அரைவாசி வீதமானவையாவது நூலகங்களைக் கொண்டிருக்கும். 20-24 வயதுக்கிடைப்பட்ட மாணவர்களில் 15 சதவீத மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவர். தொழிற்கல்வி பெறும் மாணவர்கள் எண்ணிக்கையானது 2000 ஆம் ஆணடில் 48 ஆயிரத்து 500 ஆக இருந்து 2005 ஆம் ஆண்டில் 72 ஆயிரமாக அதிகரிக்கும்.

இதேவேளை - தொழிற்பயிற்சி நிலையங்களில் அரைப்பகுதி திறமையை அடிப்படையாகக் கொண்ட நிலையங்களாக மாற்றப்பட்டு விடும்.

கல்வி மூலமாக சமூக ஒற்றுமையை வளர்ப்பதற்கு அரசு சீர்திருத்த நடவடிக்கைகளை அதிகளவு மேற்கொண்டு பாடசாலைப் பாடவிதானத்தை தேசிய ரீதியான பகுப்பாய்வுக்குத் திறப்பதன் மூலம் வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்கும் நடவடிக்கையை எடுத்துவருகின்றது.

இடைநிலைக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், ஆகியவற்றைக் கற்பிப்பதற்கு முக்கிய கவனஞ்செலுத்தி ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.




தொழிற்கல்விப் பயிற்சிக்கான செயற்றிறன் நியமங்கள் திறமையின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு, தொழிலிலிருந்து பெறப்பட்ட நியமங்களை அடிப்படையாகக் கொணடவையாக இருக்கும்.

தற்போதுள்ள மொழிக் கொள்கையினால் அபிவிருத்திக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச மொழிகளில் விசேடமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியற்று இருப்பது உலக சந்தையிலும் உள்நாட்டு தனியார் துறையிலும் பட்டதாரிகள் வேலைவாய்ப்புப் பெறுவதை மட்டுப்படுத்துவதாக மாற்றுவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டளவில் திறந்த பல்கலைக்கழக முறையில் அதிக மாணவர்களைச் சேர்ப்பதற்கு தேசியத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 23 திறந்த பல்கலைக்கழக தொலைநிலையங்கள் திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் உயர் தொழில்நுட்ப நிறுவனமானது 5 லட்சத்திற்கும் அதிகமான இலங்கையருக்கு பயிற்சியையும சமூக இணையத்தள வசதிகளையும் 2005 ஆம் ஆண்டளவில் வழங்கக்கூடியதாக இருக்கும்.

மேற்குறிப்பிட்ட தேசிய இலக்குகள் யாழ். மாவட்டத்தில் உடனடியாக இல்லாதுவிட்டாலும், கூடிய விரைவில் எட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வுத் திட்டங்களை திட்டமிடுகையில் இத்தேசிய இலக்குகளைக் கருத்திற்கொள்வது அவசியமாகும்.

ஏற்கனவே சுட்டிக்காண்பித்தது போன்று யாழ்ப்பாணப் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகளின்றி பாதிப்புறுகின்றன. அத்துடன், பயிற்றப்பட்ட ஆசிரியர்களினது பற்றாக்குறையும், பயிற்சி வசதிகள் இல்லாதிருப்பதும் காணப்படுகின்றது. பாடசாலைகள் யாவற்றிலும் கணனிக் கல்வியை வழங்குவதற்கு பாடசாலைகளில் கணனிகளைப் பொருத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் இருப்பதில்லை. இதுதொடர்பாக நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளைவிட, கிராமப்புற பாடசாலைகளிலும் நிலைமை மோசமாக இருப்பதால் மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கு முயலும தன்மை காணப்படுகின்றது.

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு கற்பித்தல் உபகரணங்கள் பற்றாக்குறையாக உள்ளன. இதன்விளைவாக அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நகர்ப்புற பாடசாலைகளில் அனுமதிபெற முயற்சிக்கின்றனர். உட்கட்டமைப்பு வசதிகளும் மூலவளங்களும் பற்றாக்குறையாக இருப்பதால் நகர்ப்புற பாடசாலைகள் இவ்வழுத்தங்களுக்கு ஈடுகொடுப்பதில் சிரமப்படுகின்றன. இதனால், பாடசாலைகளுக்கும் பிரதேசங்களுக்குமிடையில் கல்வி மூலவளங்கள் சமனற்றவகையில் விநியோகிக்கப்படுகின்றன. கல்வி வசதிகள் மற்றும் ஆசிரியர் வளம் வழங்கப்படுவதன் காரணமாக, சமனற்ற நிலை காணப்படுகின்றது. எனவே, பிரதேசங்களுக்கிடையிலான சமனற்ற நிலையைப் போக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு குறிப்பாக கிராமப்புறச் சிறார்களுக்கு அடிப்படைக் கல்வி வசதிகளையும் ஆசிரியர்களையும் வழங்கவேண்டும். கிராமப்புறங்களில் போதியளவு ஆசிரியர்கள் இல்லை. யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி வசதிகள் போதுமானதாக இல்லாதிருப்பது மட்டுமல்லாது, மாவட்டத்துக்கு வெளியே கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றிலும் கலந்துகொள்ளமுடியாத நிலையும் உள்ளது. உலகத்தின் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று நவீன தொழில்நுட்பம் மற்றும் கணனி வசதிகளைக்கூட யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிதாக இல்லை.

யாழ்ப்பாணத்தில பிராந்திய முகாமைத்துவ நிலையமொன்று அமைக்கப்படவில்லை. ஆனால், பெரும்பாலான ஏனைய மாவட்டங்களில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வுத் திட்டங்களை அமுல்படுத்தும்போது தேசிய இலக்குகள் பற்றிய ஒட்டுமொத்த நோக்கு இருப்பது அவசியமாகின்றது. எதிர்காலத்தில் தேசிய இலககுகளையும் நோக்கங்களையும் இந்த மாவட்டம் அடையும்வகையில் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும திட்டங்களும் அவசியமாகும். இத்தன்மையின் அடிப்படையிலேயே போரியல் தாக்கத்தினால் பின்னடைந்த எமது மாவட்டக் கல்வி அமைப்பை பல்வேறு கூறுகளினூடாக முன்னேற்றகரமான அடைவுக்கு உயர்த்தமுடியும். இதனை கருத்தோற்றமாகக் கொண்டு கல்விசார் முகாமையாளர்கள் இயக்கம் பெறுவது காலத்தின் தேவையை உணர்ந்து செயற்படுவதற்குச் சமனாக அமையும்.

**ப.இராஜேஸ்வரன்**
**(ஆசிரியர்)**

# மன்னாரிலிருந்து 12 குடும்பங்கள் சொந்த இடத்துக்குத் திரும்பின

குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து மன்னாரில் தங்கியிருந்த 12 குடும்பங்கள் நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டன.

கடந்த 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக சுழிபுரத்தில் இருந்து இடம்பெயர்ந்து மன்னார் நானாட்டான் இலந்தைமோட்டை கிராமத்தில் இக்குடும்பங்கள் வசித்துவந்தன.

மன்னார் அரச அதிபர் கே.விஸ்வலிங்கத்தின் பணிப்பின்பேரில் நானாட்டான் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர். சூசைநாயகம் தலைமையில் மன்னார் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றில் 12குடும்பங்களைச் சேர்ந்த 53பேர் அழைத்து வரப்பட்டனர்.

இக்குடும்பங்கள் தங்கியிருந்த இருப்பிடங்களின் கட்டுமானப் பொருளகள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் என்பனவும் மூன்று லொறிகளில் ஏற்றிவரப்பட்டன. இவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை சுமார் 9 மணியளவில் யாழ்.அரச செயலகத்திற்கு வந்துசேர்ந்தனர்.

மன்னாரில் இருந்து அழைத்து வரப்பட்ட இந்தக் குடும்பங்கள் தொடர்பாக யாழ். அரச அதிபருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அரச அதிபர் சங்கானைப் பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சங்கானைப் பிரதேச செயலாளர் மற்றும் யாழ். செயலக அரச அதிகாரிகள் இக்குடும்பங்கள் முன்னர் இருந்த சுழிபுரம் பகுதியைச் சென்று பார்வையிட்டனர். அங்கு இவர்களுடைய வீடுகள் சிலவற்றில் கடற்படையினர் தங்கியிருந்தனர். சில வீடுகள் சேதமடைநதிருந்தன.

இதனையடுத்து, சுழிபுரத்திலுள்ள பாடசாலை ஒன்றில் அல்லது அகதிகளுக்கான ஐநா.தூதரகம் அமைந்துள்ள முகாம் ஒன்றில் ஒரு வாரகாலத்துக்கு இந்தக் குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டு தேவையான நிவாரணமும் வழங்கப்படும் என்றும் - அதன்பின்னர் அவர்கள் காணிகளில் தற்காலிகக் கொட்[illegible] விதன் செய்து கொடுக்கப்பட வுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

## கல்விச்சாலைக் காட்சிகள்



பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் முன்பள்ளி அண்மையில் நடத்திய நிலாஒளி கலையரங்கில் இடம்பெற்ற முன்பள்ளி மழலைகளின் கலை நிகழ்வு ஒன்றைப் படத்தில் காணலாம்.
*(படம்: சண்டிலிப்பாய்ச் செய்தியாளர்)*



ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையில் நடைபெற்ற பொங்கல் விழா நிகழ்ச்சியில் ஏழாலைப் பகுதியின் குடும்பப் பாடசாலைத் தலைவர் சி.சிவகுமாரன் மங்கள விளக்கேற்றி பொஙகலை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

ஏனைய அதிபர்களான த.வாமதேவன், ந.சுப்பிரமணியம், க.ஜெயராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.
*(படம்: வலி.தெற்கு செய்தியாளர்)*



கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் உயர்தர மாணவர் ஒன்றிய ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்ட நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா, திருமதி என். தேவராஜா ஆகியோரைப் பாடசாலை அதிபர் ச.வாமதேவனும் மாணவ மாணவியரும் வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.
(ஒ-10)



தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

யாழ். பல்லைக்கழக சித்த மருத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் பொன். இராமநாதன், பாடசாலை அதிபர் செ.செல்வராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.
*(படம்: கொக்குவில் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்

# இலவச ஆங்கில நேரடி வகுப்பு

ஒரு மணிநேரத்தில் முழுமையாக
ஆங்கிலத்தில் கதைக்க முடியும்.

சந்தேகம் வேண்டாம். இதுவரை இருபத்தையாயிரத்துக்கு
மேற்பட்டோர் பயிற்சி பெற்று நிரூபிக்கப்பட்ட பாடநெறி.

இடம்: றிம்மர் மண்டபம் (TRIMMER HALL)
யாழ். மத்திய கல்லூரி அருகில்

காலம்: இன்று (07.06.2004) திங்கட்கிழமை மட்டும்
வகுப்புகள் (ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்)

காலை 9.00 முதல் 10.00 காலை 10.00 முதல் 11.00
மாலை 2.00 முதல் 3.00 மாலை 3.00 முதல் 4.00
மாலை 4.00 முதல் 5.00 மாலை 5.00 முதல் 6.00

## அனுமதி இலவசம்

பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கணனி, உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப்பெண்கள், இளைஞர், யுவதிகள், பட்டதாரிகள், அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள்

அனைவரும் கலந்து கொள்ளலாம்

கலந்து கொள்ளும் அனைவருக்கும்
கற்கைநெறி வழிகாட்டியும்
கலந்து கொண்டதற்கான சான்றிதழும் இலவசம்.

குறிப்பு: கடந்த காலங்களில் வகுப்புக்களில் கலந்து சான்றிதழைப் பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப்பெறாதவர்களும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
(35416)(42-11-16-37)

Psalm Institute of Engineering and Technology


# கரவெட்டிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்7

கரவெட்டிப் பிரதேச செயலா பிரிவில கடந்த 96 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரிய சேவையில் உள்ள ஓய்வூதியர்களின் ஓய்வூதிய விவரங்கள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு உள்ளன அதற்குரிய விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தினால் தற்சமயம் விநியோகிக கப்பட்டுவருகின்றன.

இதுவரையில் விண்ணப்பங்களைப பெற்றுக்கொள்ளாத ஓய்வூதியர்கள் உடனடியாகப் பிரதேச செயலகத்தில் அவற்றைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு பிரதேச செயலக கணக்காளர் அறிவித்துள்ளார். (10)

# மாவனல்லையில் கோரவிபத்து; இருவர் பலி

மாவனல்லை,ஜூன்7

கடந்த வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் மாவனல்லையில் நடந்த கோரவாகன விபத்தொன்றில் இருவர் அந்த இடத்திலேயே பலியாகினர். பத்துப்பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் மாவனல்லை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மோசமான நிலையில் இருந்த ஏழுபேர் கேகாலை தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

கம்பளையிலிருந்து வந்த லொறி ஒன்றுடன் கேகாலைப் பகுதியிலிருந்து வந்த டொல்பின் வான் ஒன்று நேருக்கு நேர் மோதியதிலேயே இக்கோர விபத்து நிகழ்ந்தது.

கணேதன்னை பள்ளி வாசலுக்கு முன்னால் இவ்விபத்து நடந்தது. 47 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரும், 19 வயதை ஒத்த வாலிபன் ஒருவருமே இக்கோர விபத்தில் உயிரிழந்தனர். இவர்களின் சடலங்கள் மாவனல்லை ஆதார வைத்தியசாலையில் வைக்கப பட்டுள்ளன.

# கோப்பாய் மருத்துவமனைக்கு ஆய்வுகூட நுட்பவியலாளர் தேவை

## அப்பிரதேச மக்கள் கோரிக்கை

கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவ மனைக்கு நிரந்தர ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் ஒருவரை நியமித்து உதவுமாறு கோப்பாய்ப் பகுதி மக்கள சுகாதாரத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் ஆய்வுகூடத் தேவைக்கும் சுமார் 10கிலோமீற்றர்கள் பயணித்து யாழ். நகரப்பகு திக்கு வரவேண்டி உள்ளனர். இதனால் முதியவர்கள், சிறுவர்கள், பெண்கள் ஆய்வுகூடப் பரிசோதனை மேற்கொள்ள சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டி இப்பகுதி மக்கள் சுகாதாரத் திணைக்களத்துக்கும், பிரதேச செயலகத்துக்கும் மகஜர்களை அனுப்பியுள்ளனர். (ஓ-72)

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 10 01 1943



விண்ணில் 07 06 1999

அழகு நிலா வானத்தில்.........
காத்தவராயன்.............
"நடிகநாதமணி" அல்வாயூர்

## செல்லையா விவேகானந்தன் (கீதன்)

பதிவியக்கும் புகழ்பூத்த பொன்மகளின் மைந்தா
பக்தியுடன் பாடல்கள் பக்குவமாய் தந்தாய்
மதியதனில் பதிவான முதிர்வான இசைகானம்
மடைதிறந்த வெள்ளமதாய் மேடையிலே முழங்கும்
சுதிசேர சுரம்பாடும் சொத்தேரியம் சுந்தரனே
சங்கீத சாஸ்திரத்தில் சாரீர வல்லோனே
விதிதானே! வித்தகனும் விவேகானந்தனை
வழிமூட வைத்தின்று ஐந்தாண்டு மானதுவோ.

ஆக்கம்:கவி

"பொன்மகள் வாசம்"
கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய்.

(32810)(37-11-16)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 583 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 04-06-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5695593-5707884 |

வெற்றி இலக்கங்கள்: 07 17 28 47

லக்கினம்: இடபம்

ஜக்பொட் பரிசு ரூபா.55,00,250/- வெல்லப்படவில்லை.
இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 58,03,275/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,71,461 | 10/- | 27,14,610/- |
| 2.இலக்கங்கள் | 24,910 | 20/- | 4,98,200/- |
| 1.இல + லக்கினம் | 24,639 | 30/- | 7,39,170/- |
| 2.இல + லக்கினம் | 2,244 | 100/- | 2,24,400/- |
| 3.இலக்கங்கள் | 653 | 500/- | 3,26,500/- |
| 3.இல + லக்கினம் | 71 | 5,000/- | 3,55,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 55,00,250/- | - |
| மொத்தம் | 3,23,982 | - | 52,57,880/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 52,57,880/-

தொடர் இல. 4726060 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூன் 08ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி வெற்றி

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5701274-5-05
5706120-9-39
5704532-1-98
5696407-4-29
5701824-5-54


## வாடகை வீடு தேவை

நெல்லியடி நகரத்தில் பிரதான வீதியில் (நெல்லியடி சந்திக்கு அருகில்) அலுவலக உபயோகத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் கொண்ட வீடு ஒன்று உடன் தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு:
கண்ணன்
217/3. கடைச்சாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
T.P:0777 763071
(சி-35465)(26)

## படிவம் (NDT)

மொறட்டுவ பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) கற்கை நெறிக்கு 2004/2005 அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது.

விண்ணப்ப முடிவுதிகதி: 30-06-2004
BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS
430,K.K.S. ROAD, JAFFNA.
(சி-35465)

## காணி விற்பனைக்கு

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன் ஒழுங்கையில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
யோ. துஷா
19/2. 2ஆம் குறுக்குத்தெரு.
பாஷையூர்
T.P.: 0777 - 917649.
(32809) (26)


# மரண அறிவித்தல்கள்

## முருகன் - நாகலிங்கம் (J.P.)



(சமாதான நீதிவான், ஏழாலை கிராமசபை முன்னாள் உபதலைவர், பொதுச்சபை உறுப்பினர் சுன்னாகம் ப.நோ.கூ.ச. கிளைக்குழுத் தலைவர், கிளை இல.23A, சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், மல்லாகம் சாளம்பை முருகன் ஆலய பரிபாலன சபை முன்னாள் உபதலைவர், மயிலங்காடு அறுமன் கலட்டி ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை முன்னாள் தலைவர், முன்னாள் இணக்கசபை உறுப்பினர், மயிலங்காடு ஸ்ரீ முருகன் கிராமமுன்னேற்றச் சங்க ஆரம்பகால தலைவர், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய ஆரம்ப நலன்விரும்பி)

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகன் நாகலிங்கம் அவர்கள் (04.06.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் பத்மநாதன், குணநாயகி,கமலநாயகி, ஜெகநாயகி, தனநாயகி, சிவநாயகி, இந்திரநாதன் (பரிஸ் இந்திரன்), யோகநாதன், தவநாதன் (பிரான்ஸ் நாதன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜெகசோதி, திருச்செல்வம், தம்பிராசா, முத்துக்குமாரு, தனபாலசிங்கம், நாகேந்திரம், பிரியவிநோதினி, சசிகலா, காலஞ்சென்ற வளர்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆச்சிக்குட்டி, காலஞ்சென்ற செல்லத்துரை, ஆனந்தி மற்றும் சோமசுந்தரம், திருப்பதி ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை தெற்கு,*
*மயிலங்காடு.* (32761)(36-11-16)

தகவல்:
நா.பத்மநாதன் (மகன்).

## இராஜேந்திரம் எமிலியானுஸ்



யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் எமிலியானுஸ் 03.06.2004 வியாழன் அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேந்திரம் - ராசாத்தியம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும் பிலோமினாவின் அன்புக் கணவரும் மலர், காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் லூர்த்தம்மா, வேல்ஸ் பீற்றர் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் எட்மன் (ஜேர்மனி), எல்மோ, எமில்சன் (ஜேர்மனி), எடிசன், எல்விஸ் (ஆசிரியர், யா/சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம், M.Ed. யாழ.பல்கலை பயில்நிலை மாணவன்), எமிலியா (பிரான்ஸ்), எமில்டா (பிரான்ஸ்), எமில்ராஜன் (ஜேர்மனி), எடின்பரோ ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறிஸ்கா (ஜேர்மனி), புஸ்பா, கிறிஸ்ரினா, மேரி ஜெனிற்றா (மண்டைதீவு), விமலன் (பிரான்ஸ்), பெலஸ்கோ குமார்(பிரான்ஸ்), றொய்சலா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.06.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு இரங்கற் திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*இல.09, 3ஆம் குறுக்குத் தெரு,*
*பாஷையூர், யாழ்ப்பாணம்.*
*T.P.:077-6063827/0777-222215.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(32808)(34-11-16-37)


# புதிய கடைத் திறப்புவிழா

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான தாரண வருஷம் வைகாசி மாதம் 25 ஆம் நாள் (07.06.2004) திங்கட்கிழமை காலை 9.45 இலிருந்து 12.45 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்



எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## K.K. போன் சேவிஸ்



இல.01, நவீன சந்தை,
மேல்மாடி (மக்கள் வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

(32812)(34-11-16-37)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### உதயன்- சஞ்சீவி அனுசரணையுடன் நடந்த

# தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையேயான பெரு விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள்

உதயன் - சஞ்சீவி அனுசரணையுடன் தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் பெரு விளையாட்டுக்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**கரபந்தாட்டம்**

19 வயதுப் பிரிவு - முதலாமிடம்- புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாமிடம் - நெடுந்தீவு மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - நயினாதீவு கணேசா வித்தியாலயம்,

17 வயதுப் பிரிவு - முதலாமிடம் நயினாதீவு ஶ்ரீ கணேசா வித்தியாலயம், இரண்டாமிடம், நெடுந்தீவு மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - புனித அந்தோனியார் கல்லூரி.

15 வயதுப் பிரிவு - முதலாமிடம்- புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாமிடம் - நயினாதீவு ஶ்ரீகணேசா வித்தியாலயம், மூன்றாமிடம் - கலாநிதி தியாகராசா மகாவித்தியாலயம்.

**வலைப்பந்தாட்டம்**

19 வயதுப் பிரிவு - முதலாமிடம் யாழ்ரன் கல்லூரி, இரண்டாமிடம் கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயம், மூன்றாமிடம் -- நெடுந்தீவு சைவப் பிரகாச மகா வித்தியாலயம்,

17 வயதுப் பிரிவு - முதலாமிடம்- கரம்பொன் சிறிய புஸ்பம் மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

15 வயதுப் பிரிவு - முதலாமிடம்- வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசசாமி மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - புங்குடுதீவு கமாலாம்பிகை மகா வித்தியாலயம் மூன்றாமிடம்- நயினாதீவு மகா வித்தியாலயம்.

**உடற் பயிற்சி**

ஆண்கள் - முதலாமிடம் -புனித அந்தோனியார் கல்லூரி,-இரண்டாமிடம் -யாழ்ரன் கல்லூரி,- மூன்றாமிடம்- நயினாதீவு கணேசா வித்தியாலயம்.

# விளையாட்டு

பெண்கள் - முதலாமிடம் - கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம், இரண்டாமிடம் -வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயம்,

**கிரிக்கெட்**

முதலாமிடம் - நயினாதீவு ம.வி. இரண்டாமிடம்- வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.வி., மூன்றாமிடம் -புனித அந்தோனியார் கல்லூரி,

**சதுரங்கம்**

ஆண்கள் 15 வயதுப் பிரிவு - முதலாமிடம் -வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம், இரண்டாமிடம்- கலாநிதி தியாகராசா வித்தியாலயம், மூன்றாமிடம் - புனித அந்தோனியார் கல்லூரி,

19 வயதுப் பிரிவு- முதலாமிடம்- புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாமிடம் -வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்,

15 வயதுப் பிரிவு - பெண்கள்- முதலாமிடம் -வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்

19 வயதுப் பிரிவு - முதலாமிடம்- வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்,

**பட்மின்ரன்**

19 வயதுப் பிரிவு (ஆண்கள்) முதலாமிடம் - புனித அந்தோனியார் கல்லூரி , இரண்டாமிடம் - கலாநிதி தியாகராசா வித்தியாலயம், மூன்றாமிடம் - வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு (பெண்கள்), முதலாமிடம் - வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம், இரண்டாமிடம் - புனித அந்தோனியார் கல்லூரி.

(ஒ-5)

# பிரெஞ்சு டெனிஸ் சம்பியன் மிஸ்கினா


கோப்பையுடன் மிஸ்கினா.

ரஷ்யாவைச் சேர்ந்த அனஸ்டாஷியா மிஸ்கினா (வயது 22) பிரெஞ்சு பகிரங்க கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக கைப்பற்றி சாதனை படைத்தார்.

107 ஆண்டுகால பிரெஞ்சு பகிரங்க டெனிஸ் போட்டி வரலாற்றில் பட்டம் வென்ற முதல் ரஷ்யர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார்.

பாரீஸில் நடைபெற்ற மகளிர் ஒற்றையருக்கான இறுதி ஆட்டத்தில் மிஸ்கினா மற்றொரு ரஷ்ய வீரங்கானையான எலீனா டேமன்டீவாவை மிக எளிதில் தோற்கடித்தார்.

களைப்பினிடையே உணர்ச்சியுடன் ஆடினேன். ரோலண்ட் காரோஸில பட்டம் வெல்ல வேண்டும் என்பது எனது கனவு. அவ்வாய்ப்பைப் பெற்றும், தோல்வியைத் தழுவியது கேவலமாக உள்ளது. ஆனால், இதுவே எனக்கு கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியல்ல என்றார் தோல்வியுற்ற டேமன்டீவா.

கடந்த மூன்று பிரெஞ்சு பகிரங்க டெனிஸ் போட்டிகளிலும் ஒரே நாட்டைச் சேர்ந்த இருவரே இறுதிச் சுற்றில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்ரா கிண்ணப் போட்டியில் யூனியன் கல்லூரி வீரர் சதம்

அஸ்ரா வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் 16வயதிற்கு உட்பட்டோருக்கான கிரிகெட் போட்டியில் முதலாவது சதத்தைத் தெல்லிபபழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.டக்சலன் பெற்றுக்கொண்டார்.

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்திற்கும் யூனியன் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் டக்சலன் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் ம.வி. 67ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

பெரியபுலம் ம.வி. வீரர் க.அமுதன 30ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

பந்து வீச்சில் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.தர்சன், எ.ஜான்சன், ஆர்.டக்சலன், ஆர். பிரணவரூபன் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணியினர் முதலாவது இனிங்ஸில் 5விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் டக்சலன் 101 ஓட்டங்களையும் பிபிரகாஸ் மற்றும் ஆர்.தர்சன் ஆகியோர முறையே 42, 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் ம.வி. 78 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் வின்சிலோ 37 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார்.

பந்துவீச்சில் கே.பென்ஜோ, ஆர். பிரணவரூபன் ஆகியோர் தலா 4விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதன் மூலம் யூனியன் கல்லூரி அணி ஒரு இனிங்ஸினாலும் 111 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது. (4-5-86)

## போட்டித் திகதிகள் மாற்றம்

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாவட்ட மட்ட கிரிக்கெட், வலைப்பந்தாட்டம் மற்றும் எல்லே ஆகிய சுற்றுப் போட்டிகள் நடைபெறும் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யூ. விமலராஜன் அறிவித்துள்ளார.

எதிர்வரும் ஜூலை மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்பொட்டி எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் மட்டக்களப்பிலும், வவுனியா எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவிருந்த எல்லேப் போட்டி ஜூலை 24, 25 ஆம் திகதிகளிலும், மே மாதம் 8 ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த வலைப்பந்தாட்டம் ஜூலை 24, 25 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5-76)

# கலைப்பீடத்தின் தடகளப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் கலைவார தடகளப் போட்டிகள் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டிகள் பிற்பகல் 1.30 மணிமுதல் மாலை 4.30 மணி வரையும், நாளைய போட்டிகள் காலை 9.30 மணிமுதல் மாலை 6 மணி வரையும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளின் பிரதம விருந்தினர்களாகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும், சிறப்பு விருந்தினர்களாக தமிழ்த்துறை தலைவர் அ.சண்முகதாஸும் கலந்து கொள்வார்கள்.

இப்போட்டிகளின் முன்னோடி நிகழ்வாக பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

# வடக்கு-கிழக்கு கிரிக்கெட் அணிக்கு யாழ்.வீரர்கள் 7பேர் தெரிவாகினர்

யாழ்ப்பாணம்,ஜூன்7

வடக்கு - கிழக்கு மாகாணக் கிரிகெட் அணிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 7 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் தம்புள்ளவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட அணி சார்பாகப் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிக்காட்டிய ஏழு வீரர்களே வடக்கு - கிழக்கு மாகாண அணிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

ஞா.செல்வின் லொஜிட் (சென்.பறறிக்ஸ் கல்லூரி), ஆர்.விநோதன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), எம்.மயூரன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), வி.ரஜீவ்குமார், கே.றொஹான் (யாழ்.மத்திய கல்லூரி), சி.மதுசன், ஈ.ஜங்கரன (கொக்குவில் இந்துக்கல்லூரி).

(ஒ-5-,190)

# வி.ரி.ஏ.விஸ்வா ஞாபகார்த்த கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்7

நாட்டுப்பற்றாளர் வி.ரி.ஏ.விஸ்வா ஞாபகர்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம், புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மற்றும் ஆவரங்கால் விளையாட்டுக்கழகம் என்பன சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் முடமாவடி ஞானவைரவர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றன.

முதலில் நடைபெற்ற 6 நபர் கொண்ட சுற்றுப்போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் உடுவில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் 3-2 என்ற சுற்றுக் கணக்கில் வென்று சம்பியனாகியது.

அடுத்து நடைபெற்ற அணிக்கு 4 நபர்கள் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புத்தூர் கலைமதி வி.கழகமும், வரணி இளைஞர் வி.கழகமும் மோதின. இதில் புத்தூர் கலைமதி வி.கழகமும் சம்பியனாகியது.

இறுதியாக நடைபெற்ற செற்அப் முறையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் ஆவரங்கால் மத்திய வி.கழகம் 3-2 செற் கணக்கில் வென்று சம்பியனாகியது.

வெற்றிபெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்களை மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழக கிளை முகாமையாளர் நா.நாகேஸ்வரனும் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் மற்றும் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

(ஒ-5-190)

# நடுவர் தீர்ப்புக்கு ஆட்சேபம் உதைபந்தாட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

உதைபந்தாட்ட மத்தியஸ்தரின் தீர்ப்பை அணிகளின் வீரர்கள் ஆட்சேபித்ததால் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை இடை நிறுத்த நேரிட்டது.

யாழ்.நகரக்கழகங்களில் ஒன்றும் வடமராட்சியைச் சேர்ந்த கழகம் ஒனறும் சமீபத்தில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தில் இடைவேளைக்கு முன்னர் யாழ். நகரப்பகுதி அணி அடுத்தடுத்து மூன்று முறைகள் பந்தை கோல்கம்பங்களுக்குள் செலுத்தியது. ஆயினும், வீரர்கள் தவறான நிலையில் நின்று (Out side) பந்தை அடித்தனர் என்று காரணம் கூறி அவற்றை கோல்களாக நடுவர் அங்கீகரிக்கவில்லை.

இதனால் குழப்பமடைந்த யாழ். வீரர்கள் நடுவர் ஒருபக்கச்சார்பாக நடந்து கொள்கிறார் என்று தெரிவித்து, ஆட்டத்தை தொடராது மைதானத்தை விட்டு வெளியேறினர்.

அது மட்டுமல்லாது வடமராட்சி பகுதி அணி வீரர்களும் பக்க நடுவர்களும் (Side) பக்கச்சார்பாக நடந்து கொண்டனர். இதனால் தொடர்ந்து விளையாடமுடியாது எனப் போட்டி ஒழுங்கமைப்பாளர்களிடம் தெரிவித்து விட்டு மைதானத்தைவிட்டு வெளியேறினர்.

இதனால் ஆட்டம் தொடர்ந்து இடம பெறாது இடைநடுவில் இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக விளையாட்டு ஏற்பாட்டாளர்கள் கூறுகையில், இவ்வாட்டத்திற்கான மத்தியஸ்தர்களை யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமே அனுப்பியிருந்தது. தகுதியானவர்களை நியமிக்க வேண்டியது அவர்களின் கடமையே என்று தெரிவித்தனர்.

(ஒ-5-51)

# ஜேர்மன் நாட்டிலிருந்து வரும் பயிற்சியாளர்கள் குழு

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரவீராங்கனைகளுக்கு வேணடிய பயிற்சிகளை வழங்க ஜேர்மன் நாட்டுப் பயிற்றுவிப்பாளர் குழுவொன்று யாழ்.குடாநாட்டுக்கு வருகை தரவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் அழைப்பின் பேரில் வருகை தரவுள்ள இப் பயிற்றுவிப்பாளர் குழு உதைபநதாட்டம், மேசைப் பந்தாட்டப் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

மேசைப்பந்தாட்டப் பயிற்சிகள் யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்திலும் உதைபந்தாட்டப் பயிற்சிகள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகள் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளதால் இதில் பங்குபற்றவிரும்பும் வீர வீராங்கனைகள மேசைப்பந்தாட்ட வீரர்கள் யாழ்மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்துடனும், தீவக உதைபந்தாட்ட வீரர்கள் ஊர்காவற்றுறை அரசியல் பணிமனை மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களிடமும் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையினர் கேட்டுள்ளனர்.

(ஒ-5)

# யாழ்.பிரதேச வீரர் ஜெயதாஸ் 800 மீற்றர் ஓட்டத்தில் சாதனை

யாழ்ப்பாணம்,ஜூன்7

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால நடத்தப்பட்ட மாவட்ட மட்ட தடகள விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் யாழ். பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஜே.ஜெயதாஸ் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

கடந்த முதலாம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.



2001 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் இவர் 800 மீற்றர் தூரத்தை 2நிமிடங்கள் 6 செக்கனில் ஓடி முடித்து சாதனையை நிலை நாட்டியிருந்தார்.

இதனை 2003ஆம் ஆண்டு சண்டிலிப்பாயைச் சேர்ந்த வி.தெய்வீகன் 2 நிமிடங்கள் 58 வினாடிகளில ஓடிமுடித்து சாதனையை முறியடித்தார்.

மீண்டும் இந்த வருடம் 2 நிமிடங்கள் 5 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார் ஜெயதாஸ். (5-190)

## தடகளப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் தடகளப்போட்டிகள் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.(ஒ-5-190)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான Prima, Broiler மற்றும் பேட்டுக் குஞ்சுகள் 07-06-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறை கிளையிலும் Suddi Farm வட்டுக்கோட்டையிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டி பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (32515)

தரமான பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும், பிறிமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 09.06.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No: 3529, 2867,. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (32771)

3 ஸ்ரீ பரீனா கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 100 இராசிலின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். (கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டது) (32801)

27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேல்மாடியுடன் (மொட்டைமாடியுடன்- சமுர்த்தி வங்கிக்கு முன ஒழுங்கையில்) நல்ல சூழலில் வாகனத் தரிப்பிட வசதியுடன் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (சி-35429)

கே.கே.எஸ்.வீதி, மல்லாகத்தில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 0712339127.(சி-35463)

## தொடர்பு கொள்ளவும்

News Mate Yamaha - 50 NPGH 0176 மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் தயவுசெய்து பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு தயவாக வேண்டுகிறேன். தொடர்பு: S.S பாஸ்கரன், சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடி, நவாலி தெற்கு மானிப்பாய். T.P. 021 222 6350, 0777 917699. (32778)

**VACANCY**

**கணனி செய்முறைப் பயிற்றுவிப்பாளர்**

தகைமை:
MS Office, DTP, Computer Programming இல் Diploma சான்றிதழ்.
சாவகச்சேரியில் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தகுதியானவர்கள் 07.06.2004 10 மணியிலிருந்து ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

**NORTH LANKA**
Institute of Information Technology
கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி. (32799)

**VACANCY**

**ADMINISTRATIVE SECRETARY (FEMALE)**

A WELL REPUTED ORGANIZATION IS LOOKING FOR A SUITABLE PERSON WITH THE KNOWLEDGE OF COMPUTER LITERACY, KNOWLEDGE OF ENGLISH AND REASONABLY GOOD KNOWLEDGE OF ACCOUNTANCY.

**WALK IN INTEVIEWS**
40, KANDY ROAD,
CHUNDIKULI,
JAFFNA.
(32765) (37-14-16-26)

# மிதிவெடி அகற்றும் தனியாருக்கு உரிய பயிற்சிகள் அவசியமாகும்

## பொதுமக்கள் எதிர்பார்ப்பு

குடாநாட்டில் மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை அகற்றும் பணியில் ஈடுபடும் ஆள்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. உரிய பயிற்சிகள் இல்லாத நிலையில்-பெரிதும் ஆபத்துக்களின் மத்தியில் சில குழுக்கள் தனியார் காணிகளில் மதிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன.

மிதிவெடி அகற்றும் அமைப்புக்கள தனியாருக்குச் சொந்தமான காணிகளில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு தாமதம் காட்டி வருவதால் காணி உரிமையாளர்கள் மேற்படி குழுக்களின் உதவியை நாடி வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

அண்மையில் குப்பிளான் பகுதியில் படையினரால் கைவிடப்பட்ட மண் அரணைக்கொண்ட காணியில் சில நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் மிதிவெடிகளை அகற்றிக் கொடுத்துள்ளனர்.

இதன்போது அக்காணியிலிருந்து சுமார் எழுபதிற்கும் மேற்பட்ட வெடிப் பொருள்களை அவர்கள் அகற்றியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு மிதிவெடி அகற்றலில் சுயாதீனமாக ஈடுபட்டுவரும் குழுக்களுக்கு மிதிவெடி அகற்றும் அமைபபுக்கள் உரிய பயிற்சிகளை வழங்க வேண்டும் என்றும் - இதன் மூலம் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படலாம் என்றும் -பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-4)

# துப்பாக்கிகள் மீட்பு

மாத்தளைப் பகுதியில் பொலீஸார் மேற்கொண்ட சோதனை ஒன்றின்போது துப்பாக்கிகள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறி 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டுபிடிக்கப் பட்ட துப்பாக்கிகளில் ஒன்று கடந்த பொதுத்தேர்தலின்போது நாடாளுமன்ற உறுப்பினர் றஞ்சித் அலு விகாரவின் வீட்டிலிருந்து திருடப்பட்டது எனத் தெரியவந்துள்ளது. (ஓ-6)

# தாயகம் திரும்பிய அகதிகள் கைது!

மன்னார்,ஜூன்7

இந்தியாவில் இருந்து படகுகளில் இலங்கை வந்த 29 இலங்கை அகதிகளை கடற்படையினர் தலை மன்னாரில் வைத்துக் கைதுசெய்து மன்னார் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 29 பேரும் தற்போது மன்னார் பொலஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.(ஓ-6)

**ஊடகமே உலகம்**
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி
**DIPLOMA IN MASS MEDIA**
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. in. M.M. (Sri Lanka)
**DIPLOMA IN BROADCASTING**
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. in. B.C. (Sri Lanka)
சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்
**தபால் மூலம்**
6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830
**MMIC** 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,

# நீங்காத நினைவில் முதலாம் வருடம்

அன்னையின் மடியில் 20 - 04 - 1978



ஆண்டவன் அடியில் 20 - 05 - 2003

## அமரர் சின்னத்துரை சிவலிங்கம்

திதி: 7.6.2004

ஆறாது உங்கள் நினைவு
அப்பா நீங்கள் இல்லாத உலகில்
அநாதைகள் நாங்கள் இங்கே
ஆனை வாயில் அகப்பட்ட கரும்பானோம்
ஆழ் கடலில் விடுபட்ட துரும்பானோம்
அனல் நடுவே எரியுண்ட மெழுகானோம்
அதி காலையிலே நீங்கள் வானேறி சென்றீர்கள்
அல்லைப்பிட்டி வழிதனிலே
காலனவன் காத்து நின்று
உங்கள் உயிரினைப் பறித்தானே!
ஆற்றிட யாரும் இன்றித் தவிக்கின்றோம்
ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தும்
ஆதரிக்க எங்களுக்கு நீங்கள் இல்லையே!
எம்மை ஆற்றிட இவ்வுலகிற்கு வாருங்கள்
ஆறாத துயரினைச் சுமந்து ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் வட்டாரம், புங்குடுதீவு
*மனைவி* - துஷயந்தினி சிவலிங்கம்
*மகள்* - சிவஜனா சிவலிங்கம்

(C/32800)(38-21-17-16)

# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரலிங்கம் இராசலட்சுமி



பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், 'அன்பு இல்லம்' திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் இராசலட்சுமி அவர்கள் 25.05.2004 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார், முன்னாள் கிராம சேவையாளர் சங்கரப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சிவசங்கரன் (கிழக்குப் பல்லைக் கழகம்), உமாசங்கரன் (விலங்கு மருத்துவ பீடம், பேராதனைப் பல்கலைக கழகம்), ஞானசங்கரன் (இந்துக் கல்லூரி - திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்பு இல்லக் குழந்தைகளின் அன்பு அன்னையும் நகுலேஸ்வரியின் அன்புச் சகோதரியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.05.2004 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் 167, மத்திய வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சுப்பிரமணியம்
(மைத்துனர் - தபாலதிபர்)
சு.நகுலேஸ்வரி (சகோதரி)

*பத்தாவத்தை,*
*இளவாலை.* (32805)

**புதிய இசை வகுப்புகள்**
யாழ். முன்னணி இசை நிறுவனத்தில் புதிய இசை வகுப்புகள்
**நியூவீணா கானம்,**
16/2, கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 222 7729,
0777 - 159237. (32803)

**வாடகைக்கு அறை**
Y.M.C.A திட்டங்களுக்கமைவாக உடுவில Y.M.C.Aயில் ஓர் அறை வாடகைக்குண்டு. கேள்விப் பத்திரத்தை ஆனி 15 ஆம் திகதிக்கு முன்னதாக (15.06.2004) வேலை நாள்களில் மாலை 3 மணி முதல் 5மணி வரை Y.M.C.A யின் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.
**Y.M.C.A,** - செயலாளர்.
உடுவில். (32804)(38)

# 4 ஆம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 29 - 04 - 1934
மறைவு 23 - 05 - 2000

திதி: 07-06-2004

## அமரர் முத்து இராசரத்தினம்

(முத்தையா - இளைப்பாறிய புகையிரத ஊழியர்)

**ஆண்டுகள் நான்கு சென்றாலும்**
**ஆறவில்லை எம் துயரம்**

"முருகன் இல்லம்"
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (32793)(34-14-16)

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

# பிறந்தநாள் நினைவலைகள்

07.06.2004

அமரர்

## திருமதி இரஞ்சினிதேவி பாலகுமரன்



இன்று உன் பிறந்தநாள்
சென்ற ஆண்டில் நாம்
ஒன்றாக மகிழ்ந்திருந்தோம்
இன்று தனிமரமாக
தன்னந்தனியாக நிற்கிறேன்
என்ன இனிச் செய்வது?
என் விழிகள் உன்னைத் தேடுதம்மா!
உன் உருவம் காணத் துடிக்குதம்மா!
உன் பாதம் விட்ட சுவடுகாண
நெஞ்சம் தேடித் தவிக்குதம்மா
யாருக்கு நான் தீங்கு செய்தேன்?
யார் மனதை நோகடித்தேன்?
உன்னை நினைந்து, விதியை நொந்து
கண்கள் நனைந்து, உன் சாந்திக்காகப்
பிரார்த்திக்கிறேன்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

ப.பாலகுமரன்
(கணவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவை நாடு கடத்தக்கோருவது இந்தியாவுக்கு இப்போது முக்கியமல்ல

## வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் கருத்து

கொழும்பு,ஜுன்7

இலங்கைக்கு இப்பொழுது அமைதி தேவைப்படுகின்றது. விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகக்கூடும் இந்த நிலைமையில விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும் என்பது இப்போதைக்கு எமக்கு முக்கியமான விடயமல்ல.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சா நட்வர் சிங் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றின் புதுடில்லி நிருபருக்கு நட்வர் சிங் அளித்துள்ள ஒரு பேட்டியில்;

விடுதலைப் புலிகளின் தலைவரை இந்தியாவுக்கு நாடு கடத்தவேண்டும என்ற கோரிக்கை வெகு காலமாகவே இருந்த வருகிறது. முந்திய அரசு காலத்திலும் இந்த நிலை நீடித்தது. விடுதலைப் புலிகள்மீது 1992 மே 14 ஆம் திகதி இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது. அது இனனும் இரண்டு வருடங்களுக்குக் கடந்த மாதம் நீடிக்கப்பட்டது. எதுவானாலும் உள்நாட்டு யுத்தத்தால் சீர் குலைந்து போயுள்ள இலங்கைக்கு அவசரமாக அமைதி தேவைப்படுகின்றது. இப்பொழுது அமைதிப்பேச்சுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பிரபாகரனை நாடுகடத்தும் விடயம் தற்போதைக்கு எமக்கு முக்கிய விடயமல்ல என்று கூறினார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பட்டதாரியான 72 வயது நட்வர் சிங் மேலும் கூறுகையில், இங்கு வருகை தந்திருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் விரிவாக நாங்கள் பேச்சுக்களை நடத்தினோம் அவர் எமது பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கையும் சந்தித்தார். மற்றும் அமைச்சர்களோடும் ஆலோசனைகள நடத்தினர். இலங்கைக்கு மீண்டும் அமைதி திரும்ப வேண்டும் என்று நாங்கள் அவருக்குத் தெரிவித்தோம். இதைச் சாத்தியமாக்க எம்மாலான உதவிகளைச் செய்வதாக உறுதிகூறினோம். - என்று கூறினார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புபடுத்தப்பட்ட மூன்று பேரை இந்தியாவுக்கு நாடுகடத்தும்படி இந்தியாவின் காங்கிரஸ் கட்சித் தலைமையிலான அரசு தற்போது வற்புறுத்தாமல இருப்பதற்கு அந்நாட்டுத் தலைவர்கள் இலங்கையில் மீண்டும் அமைதி திரும்பவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது என்று அவதானிகள் இங்கு சுட்டிக் காட்டுகிறார்கள்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவரான நளினி, ராஜீவ் காந்தியின் துணைவியாரான சோனியாகாந்தியின் சிபார்சின்பேரில் தண்டனை குறைக்கப்பட்டு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (ப)


**C.C.A**
சுன்னாகம்
★ Spoken English with Grammar. -வழமையான பிரிவு-
★ special English speech course.
(இலகுவான முறையில் பேச்சுப் பயிற்சிகளைக் கொண்ட விசேடபிரிவு.)
BY.Mr.K.Nishanthan.
நாளை ஆரம்பம்:-08. 06. 2004
(32802) செவ்வாய், வியாழன்-2.00(ப.நே). (17)


# சமய சந்நிதிகளில்

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கும் தீர்த்தத்திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமையும் நடைபெற உள்ளன. (எ-73)

★ ★ ★

யாழ்.வண்ணைகாட்டுத்துணை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 16 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (எ)

★ ★ ★

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி தேவஸ்தான மகோற்வசம நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி காலை தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (எ-117)

★ ★ ★

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை ஆலய முன்றலில் சிலம்பு விளையாட்டு நடைபெறும். (எ-78)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு,மண்டுவில் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த விசாகப்பொங்கல் உற்சவம் இன்று மாலை இடம்பெறவுள்ளது.

விசாகப் பொங்கல் உற்சவத்தை யொட்டி'காவடி விழா' விசேட நிகழ்வாக இடம்பெறும்.

சங்கத்தானை கந்தசுவாமி கோயில், மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயம், மீசாலை கங்காணியார் ஆலயம் ஆகிய ஆலயங்களில் இருந்து மேற்படி ஆலயத்திற்கு காவடிகள் வந்துசேரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-31)

★ ★ ★

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அருள்மிகு பார்வதி அம்பாள் சமேச பரமேஸ்வரன் ஆலய மணவாளக்கோல விழா இன்று நடைபெறும்.

காலை 7.00 மணிக்கு நவோத்திர சகஷ்ர சங்காபிஷேகம் பி.ப.2.00 மணிக்கு திருக்கல்யாணமும், மாலை 4.00 மணிக்கு சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். (எ)

# வட்டுக்கோட்டையில் இன்று கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம்,ஜுன்7

வட்டுக்கோட்டை, உடுக்கியவளை ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பிரதிஷ்டா மஹாகும்பாபிசேகப் பெருஞ்சாந்தி விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.46மணி முதல் 11.40 மணிவரையான சுப நேரத்தில் இடம் பெறவிருக்கின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான கிரியைகள் தொடர்ந்து நடைபெற்று இன்று கும்பாபிசேகம் இடமபெறுகின்றது.

கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிசேகம் இடம்பெறும். (3)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3550715 இலிருந்து 3564797 வரை

சீட்டிழுப்பு இல. 1510
திகதி 05.06.2004

வெற்றி எண்கள்
**01 33 35 48 55**, போனஸ் எண் **12**

ஜக்பொட் பரிசு ரூபா. 18,62,600/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 18,62,600/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 | 89 | 10,000/- | 8,90,000/- |
| 3 | 4,497 | 500/- | 22,48,500/- |
| 2 | 74,061 | 20/- | 14,81,220/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 91,255 | 10/- | 9,12,550/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட்
**Rs. 25,63,750/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 58,32,270/-

தொடர் இல. 2598357 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 ஜுன் 09 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3563868-1-12
3557177-6-31
3554547-1-07
3555968-5-76
3550884-4-44

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## தொல்புரம் முத்துமாரி அம்மன் தேவஸ்தான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு 1135
இரண்டாம் பரிசு 1920
மூன்றாம் பரிசு 2440

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| (1) | 2907 | (6) | 4416 |
| (2) | 4892 | (7) | 3255 |
| (3) | 4915 | (8) | 2024 |
| (4) | 4631 | (9) | 645 |
| (5) | 3243 | (10) | 1937 |

(32816)(40-36-13-14)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சமுதாய முன்னேற்ற நிலையத்தினால் 31.05.2004 அன்று வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷடசாலிகள்.

1) முதலாம் பரிசு இல : 34253
2) இரண்டாம் பரிசு இல : 11321
3) மூன்றாம் பரிசு இல : 05211

10 ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | |
|---|---|
| 1) 08413 | 06) 20831 |
| 02) 01305 | 07) 15949 |
| 03) 18393 | 08) 34783 |
| 04) 07547 | 09) 15762 |
| 05) 03182 | 10) 01137 |

சமுதாய முன்னேற்ற நிலையம்
யாழ்.மாவட்டம்.

(32815)(13-14-36)

## ஒன்பதாவது வருட நினைவுகளுடன்...



மலர்வு 09 -01-1971
உதிர்வு 06-06-1996

அமரர் **கதிரன் கனகலிங்கம்**

பாசமிகு அன்பு அண்ணாவே குடும்பத்தின்
ஒளிவிளக்காய் இருந்து எங்களுக்கு நல்வழி
காட்டிய அண்ணாவே!
சொந்த பந்தங்களை இழந்து ஆண்டு
ஒன்பது சென்றாலும் உம் நினைவு மாறாது!

திதி:-07-06-2004
கைதடி மத்தி,
குமரநகர்.
(32819)(35-14-36)

சித்தி, அம்மா, அப்பா,
சகோதரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியாகக் கடமை புரியும் திருமதி P.கணேசமூர்த்தி அவர்களின் தாயார்

திருமதி **கந்தப்பிள்ளை மகேஸ்வரி**

காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

- தாதியர் நலன்புரிச் சங்கம்.

(32814)(13-14-36)


**BARATHY**
சித்தன்கேணி
A/L -2006
புதிய பிரிவு நடைபெறுகின்றது
யாழ்.ஆசிரியர் குழுவினால
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக்கல்வி - பசில்
அளவையியல் - R.P.சர்மா
தமிழ் - பாலா
இந்துநாகரிகம் - சுரேஸ்
புவியியல் - குமரன்
கிறிஸ்தவம் - வசந்தன்
இந்துசமயம் - தரன்
நாடக அரங்கு - சுதன்
அரசியல் - றஜீவன்
ஆங்கலம் - நிஷாந்தன்
இதுவரை அனுமதி பெறாத மாணவர்கள் இன்றலிருந்து உங்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.
(32813)(30)

நாகம்ஸ் சுன்னாகம்

டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், த்ரிசா, பிரகாஷ்ராஜ்
கில்லி (ரீல்ஸ்) நடித்த
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 7.00,10.00
(C/363991)(12)

ராஜா யாழ்ப்பாணம்
3 ஆவது வாரம்
சூர்யா, ஈஷா, மாதவன், மீரா, சித்தார்த், த்ரிஷா நடித்த

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30 (பு.நே)
(C/34517) (22)

நிறைஞ்சனாஸ் சங்கானை
கார்த்திக், ரோஜா, மணிவண்ணன நடித்த
சின்னராஜா
காட்சிநேரம்:11.00, 2.45, 6.00 (பு.நே) (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணிக்கு
AMPRICAN PIE
(சி-34420)(29)

லக்சுமி இணுவில்
5ஆவது வெற்றிவாரம்...
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

மிகப் பிரமாண்டமான தயாரிப்பில்
சூர்யா (2 வேடங்கள்)
ஜோதிகா நடிக்கும்
தினசரி :11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரி றீற்ரா கிறிஸ்தோப்பர்



கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி றீற்ரா கிறிஸ்தோப்பர் 2004.06.04 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேல்பிள்ளை, செலஸ்ரீனம்மா ஆகியோரது சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பரின் அன்பு மனைவியும் ஜில்லரி அருள்நேசன் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான யூஜின், பிரான்சிஸ் மற்றும் மெலானி (அளவெட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மேரி யசிந்தா மற்றும் சேவியர் (ஹொலண்ட்), கிளிபேட (கிளிநொச்சி), றெபேக்கா, சில்வெஸ்டர் செல்வநாயகம் (இலங்கை வங்கி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி (ஜேர்மனி), மோகன்ராஜ் (அளவெட்டி) ஆகியோரின் மாமியாரும் மெறின்சியா (அளவெட்டி), டிலான் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.06.2004 புதன்கிழமை அன்று காலை 10மணியளவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக வைக்கப்பட்டு, பின் அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கரம்பொன் கிழக்கு,*
*ஊர்காவற்றுறை.*
(32817)(36-13-14)

தகவல்:
மகள்
திருமதி மெலானி மோகன்ராஜ்.

## திருமதி அனிற்றா கிறிஸ்ரின் கணேசன்



முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும்,' பளை தெல்லிப்பழையை வாழிடமாகவும் தற்போது கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனிற்றா கிறிஸ்ரின் கணேசன் அவர்கள் 05.06.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணேசனின் பாசமிகு மனைவியும், ரசிதா, றெஜினா, பிரசாந்தன், வதுஜனா,சஞ்சீவன், லக்சாந்தினி, திலக்சா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்(09.06.2004) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (32818)(36-13-14)

தகவல்:
பிள்ளைகள், கணவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் எழுச்சி தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா,ஜூன்7

வவுனியாவில் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. வவுனியா வைரவப் புளியங்குளம் சிறுவர் மைதானத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. முன்னதாக வைரவ புளியங்குளம் சந்தியில் இருந்து மாணவர்களின் பேரணி ஆரம்பமாகி 'பாண்ட்' வாத்திய இசையுடன் சிறுவா பூங்கா மைதானத்தை வந்தடைந்தது. அங்கு வவுனியா வளாக மாணவி சோபனா தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் பொதுச்சுடரினை கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் பொறுப்பாளர் சிறீநாத் ஏற்றினார். தேசியக்கொடியினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலை ஏற்றினார். ஈகச் சுடரினை மாணவர் அமைப்பின் தலைவர் ஏ.வினோதன் ஏற்றினார். மலர் மாலையினை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் வ்ன்னி மாவட்ட தலைவர் செந்தில்நாதன் அணிவித்தார். இதனைத் தொடர்ந்து சிறப்புரைகளைப் பலரும் நிகழ்த்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி தமது உரையில் உண்மையைத் தேடும் ஆர்வம் மாணவர்களின் மத்தியில் இருக்கவேண்டும். இது தான் மாணவர் எழுச்சி நாளுக்கு காரணமானதென பொன்.சிவகுமார் அறிந்தார் என்று குறிப்பிட்டார். (எ-164)

# அறுதிப் பெரும்பான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகியோரும் அரசுப்பக்கம் சேரக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

இவர்களையும் சேர்த்தாலும அரசுத் தரப்பு அறுதிப் பெரும்பான்மையை எட்டுவதற்கு மேலும் இரண்டு, மூன்று எம்.பிக்கள் தேவை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எதிரணித் தரப்பில் ஒருவர் சபா நாயகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஜாதிகஹெல உறுமயவின் ஓர் எம்.பியின் நிலை நீதிமன்றத்தில் இழுபடப்போகின்றது. எனவே, எதிரணித் தரப்பிலும் இரண்டு எம்.பிக்களின் எண்ணிக்கை குறையும்.

ஆகவே, குறைந்தது 111 எம்.பிக்களின் ஆதரவு இருந்தால் இப்போதைக்கு அரசைக் கவிழவிடாமல் கொண்டிழுக்கலாம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஐ.ம.ச. கூட்டமைப்பின் 105 எம்.பிக்கள், ஈ.பி.டி.பியின் - ஓர் எம்.பி, ஜாதிகஹெல உறுமையவின் - ஓர் எம்.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் - மூன்று எம்பிக்கள்(பைலா, ரிஷாத், நஜீப் ஏ.மஜீத்) என 110 உறுப்பினர்களே அரசுத்தரப்புப் பக்கம் உள்ளனர்.

எனவே, இப்போதைய நிலையில் ஆகக்குறைந்தது எதிரணியிலிருந்து மேலும் ஓர் எம்.பியினது ஆதரவை யாவது பெற்றாகவேண்டும் என்ற நிலை அரசுத்தரப்புக்கு.

இதற்காக - எதிரணி எம்.பிக்களை 'வாங்கும்' பணிக்காக - அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் உயர் குழு ஒன்றை அரசுத்தரப்பு நியமித்திருப்பதாகத் தகவல்.

பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சி, எம்.பிக்களான மகிந்தானந்த அளுத்கமகே, லஸந்த அழகியவன்ன மற்றும் ஜே.வி.பியின் எம்பியான விமல் வீரவன்ஸ ஆகியோர் அக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

எம்.பிக்களை வாங்குவது தொடர்பான விடயங்களின் போக்குக் குறித்து கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியும் அறிந்துகொள்வதற்கு வசதியாகவே இக்குழுவில் விமல் வீரவன்ஸ சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் இ.தொ.காங்கிரஸுடன் அரசுத் தரப்பு நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்துவிட்டன என அறியவந்தது.

அரசில் சேர்வதற்கு இ.தொ.கா. விதித்த நிபந்தனைகள் எல்லை மீறியவை என்று ஜனாதிபதி பதிலளித்ததை அடுத்தே அம்முயற்சி முறிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவு, உபசபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதித்தலைவர் தெரிவு போன்ற முக்கிய விடயங்கள் நடந்தேறிவிட்டன.

இப்போது உடனடியாக முக்கிய சட்டங்கள் எவற்றையும் நாடாளுமன்றத்துக்கு அவசரமாகக் கொண்டுவரும் உத்தேசம் ஏதும் அரசுக்குக் கிடையாது.

இந்தப் பின்னணியில், நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிராக எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணை போன்ற ஒன்றுக்கு முன்னறிவித்தல் கொடுக்காத வரையில் நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாத அரசுக்கு அது கவிழும் என்ற உடனடி ஆபத்து நிலை ஏதுமில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (க)


SUBRA (14)
சித்தன்கேணி
Spoken English and Grammar
புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டது.
செவ்வாய்-வியாழன்
காலை 7.00~8.00
by - BRITTO
பேச்சுச் சிங்களம்
திரு.லீலாகிருஷ்ணன்
புதிய பிரிவு
செவ்வாய்-வியாழன்
8.00-9.00
(சி-35449)(32)


# கனகன்புளியடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் இவ்வீதி வழியாக வாகனங்களில் கடத்தப்படுவதாகக் பொதுமக்கள் கொடுத்த முறைப்பாடுகளையடுத்து கனகம்புளியடிச் சந்தியில் நிரந்தர சோதனை நிலையம் அமைக்கப்படவுள்ளதாக பொலீஸ் நிலைய குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி எஸ். ஏ.எரிக் றோஹித தெரிவித்தார். (எ-117)

# தமிழீழ மாணவர் எழுச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சிநாள் பிரகடனத்தை எஸ்.சுயதர்சனன் வெளியிட்டார்.

நினைவுரைகளை உடும்பிராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் க.மகேஸ்வரன், சிவகுமாரின் சகோதரர் பொன். சிவசுப்பிரமணியம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம், கோப்பாய் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிரி, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் மனோன்மணி சண்முகதாஸ் மற்றும் க.விமலதாஸ், ந.சிவாஜினி ஆகியோர் நிகழ்த்தினர்.

### யாழ்ப்பாணத்தில்

யாழ் மனோகராச் சந்தியில் நேற்று முற்பகல் 10.30 மணிக்குப் பேரணி ஆரம்பமானது. 'பாண்ட்' இசைக்க எழுச்சிக் கோஷங்களை எழுப்பியவாறு பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பேரணியில் கலந்துகொண்டனர்.

முரளி, பொன்.சிவகுமாரன் ஆகியோரின் உருவப்படங்களை மாணவர்கள் தாங்கிச்சென்றனர். யாழ். இந்துக் கல்லூரியினை பேரணி வந்தடைந்ததும், மைதானத்தில் சிவகுமாரன், முரளி ஆகியோரின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேடை முன்பாக மாணவர்கள் ஒன்றுகூடினர்.

அங்கு தமிழ் மாணவர் ஒன்றியத் துணைத் தலைவர் ப.குணேந்திரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொதுச்சுடரினை சர்வதேச மாணவர் பேரவையின் இணைப்பாளர் ந.கண்ணன், நல்லூர் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.திருமறவன், நல்லூர்க்கோட்ட மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் ஜெயதரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.நளன் ஏற்றிவைத்தார்.

பொன்.சிவகுமாரனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் அ.சிறிகுமரன் ஏற்றிவைத்தார். மேஜர் முரளியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் செல்வகுமார் ஏற்றிவைத்தார்.

சிவகுமாரனின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை யாழ். - நல்லூர் பிரதேச மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகளும், முரளியின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.தீசனும் அணிவித்தனர்.

நிகழ்வில், நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### வலிகாமத்தில்

வலிகாமம் கோட்டத்திற்கான மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அ.திவ்வியராஜ் தலைமையில் நடைபெற்றன.

முதலில் சங்கானை பஸ்நிலையத்தில் இருந்து வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் ஊர்வலமாக சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தை வந்தடைந்தனர். மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய் சென். ஆன்ஸ் வித்தியாலய மாணவர்களின் 'பாண்ட்' இசை வாத்தியத்துடன், வலிகாமம் கோட்ட சங்கானை அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு தலைமையில் பேரணி பாடசாலையை வந்தடைந்தது.

பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் மணிவண்ணன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார் இதனைத் தொடர்ந்து, கப்டன் பெருந்தேவனின் தாயார் செந்தமிழ்ச்செல்வம் அன்னலட்சுமி ஈகச் சுடரை ஏற்றிவைத்தார். பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் எனப் பலரும் மேஜர் முரளி, பொன்சிவகுமாரன் ஆகியோரின் படங்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

### வடமராட்சியில்

வடமராட்சியில் மாணவர் எழுச்சி தினப் பேரணி கரவெட்டி நாவலர் மடச் சந்தியில் இருந்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகியது. பேரணியில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படம், தியாகி பொ.சிவகுமாரன் மற்றும் மேஜர் முரளி ஆகியோரின் திருவுருவப்படங்கள் என்பனவற்றைத் தாங்கிய ஊர்தி முன்னே சென்றது.

தொடர்ந்து எழுச்சி வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியபடி பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் சென்றனர்.

பேரணி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை அடைந்ததும் அங்கு பொதுச் சுடரை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை கடற்புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் கல்யாணியும், நெல்லியடி மத்தியமகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜாவும் ஏற்றினர். தமிழீழத் தேசியக் கொடியை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைத்தார். மேஜர் முரளியின் உருவப்படத்துக்கு வடமராட்சி மாணவர் அமைப்பைச் சேர்ந்த பா.முகுந்தனும், தியாகி சிவகுமாரனின் உருவப்படத்துக்கு வடமராட்சி கல்விப்பணிப்பாளர் எஸ்செல்வரட்ணமும் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கியாப்பா, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அதிபர் எஸ்.நடராசா ஆகியோர் உட்படப் பலர் எழுச்சி உரைகளை நிகழ்த்தினர்.

மாலையில் அல்வாய் ஸ்ரீலங்கா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

### தீவுப்பகுதியில்

வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவுப் பிரதேசங்களுக்கான மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் ஊர்காவற்றுறையில் இடம்பெற்றன.

எழுச்சிநாள் பேரணி, ஊர்காவற்றுறை நீர்தாங்கியடியில் இருந்து காலை 10மணிக்கு ஆரம்பமானது. ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி ஆகியவற்றின் 'பாண்ட்' வாத்தியம் சகிதம் தியாகி பொன். சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோரின் திருவுருவப்படங்கள் பேரணியில் எடுத்துச்செல்லப்பட்டன.

நிகழ்வுகள் ஊர்காவற்றுறைப் பிரதேச சபை மைதானத்தில் புனித அந்தோனியார் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.ருசேந்திரா தலைமையில் இடம்பெற்றது. பொதுச் சுடரினை வேலணை மத்திய கல்லூரி அதிபர் எஸ்.அருணகிரிநாதன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை நெடுந்தீவு பிரதேச பொறுப்பாளர் அருணன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை மாவீரர் கப்டன் யோக்கினின் தாயார் ஏற்றிவைத்தார். மலர் மாலையினை வேலணை மத்திய கல்லூரி மாணவ தலைவர் எஸ். வினோதன் அணிவித்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

புங்குடுதீவு சிறி சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் கணேசலிங்கம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறையன், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம், நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். இறுதியாக மாணவர் எழுச்சிநாள் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

தென்மராட்சிக் கோட்டத்திற்கான எழுச்சி நிகழ்வுகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

(எ-3-6-9-15-29-31-70-76-86-180-ரி)


IIS
கணனிக் கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1: 05/06/2004
பிரிவு 2: 07/06/2004
பிரிவு 3: 19/06/2004
மேற்படி திகதிகளில் புதிய டிப்ளோமா கணனிக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதால் ஆர்வமுள்ள மாணவர்களிடமிருந்து IIS நிறுவனம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. மாணவர்கள்அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். *A/L 2004 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கான பிரத்தியேக பிரிவு இது என்பது குறிப்பிடத்தக்கது.*
கணனிக்கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனியுலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.
இயக்குநர்
IIS, இல 100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



Jaffna College Institute of Technology
Vaddukoddai, Jaffna, SriLanka
*The following Courses will commence from 9th June 2004*
Technician Diploma Course
(NDT Level Courses)
Electronics & Telecommunication Engineering
*Duration: 3 Years (Full Time)*
Technician Certificate Course
Electronics & Telecommunications
*Duration: 1 Year (Full Time)*
*Note:* Open University Exemption for our Diploma Courses
Our Diploma will Guide the students to the Examination of the following bodies.
☆ City & Guilds of London Institute
☆ Open University of SriLanka
*Facilities:*
*LIBRARY
*HOSTEL
*SPORTS
FOR APPLICATIONS FORMS AND DETAILS CONTACT:
Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai.
E-Mail:jcit@sltnet.lk. Tel.Phone : 0602213139
(C/35443)(40-14-13-32)



MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.
பதிவுகள் 11.06.2004 இற்கு முன் நேரில்



JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA, SRI LANKA.
ANNIVERSARY
e-mail : jti@sltnet.lk Reg. No 15251 T.P : 0777-292127
Diploma Courses
இலவச கணனிப் பயிற்சி நெறி
Diploma in Microsoft Office XP
Diploma in Desktop Publishing
Diploma in Windows Application
Diploma in Hardware Engineering
Diploma in Computer Programming
Diploma in Visual Basic Programming
மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
கடந்த 25 வருடங்களாக கணனித்துறையிலும் தொழில்நுட்பத்துறையிலும் பெரும் பங்காற்றி வரும் எமது நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சியினை வழங்கி வருகிறது அதேபோல் இவ்வாண்டும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.
இவ் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்
APPLICATION FORM
Full Name : ..........
Address : ..........
Date of Birth : ..........
Course : ..........
Date Signature of Applicant
Certificate Courses
Word XP, Excel XP, Access XP, PowerPoint XP
Corel Draw 11, Page Maker 7, Visual FoxPro 6
HTML, Java, Oracle, Pascal, C/C++
No: 07, Palaly Road, Jaffna, Sri Lanka.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 11.06.04 12.06.04 10.00 மணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, [illegible]61ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.